பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 27 செவ்வாய்க்கிழமை (10-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:76

## நாடாளுமன்றக் கலைப்பும் பொதுத் தேர்தலும்

# சமாதான முயற்சிகளுக்குப் பின்னடைவு

# தமிழர் எதிர்காலத்துக்கு அச்சுறுத்தல்

## மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் கருத்து

லண்டன்,பெப்ரவரி10



இலங்கை நாடாளுமன்றத்தைக் கலைத்து, மீண்டும் ஒரு பொதுத்தேர்தலை நடத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்டுள்ள நடவடிக்கை இலங்கையின் சமாதான முயற்சிக்கு ஏற்பட்டுள்ள பெரும் பின்னடைவு என்று விடுதலைப் புலிகளின் மதியுரைஞரான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார். தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்திற்கும், பாதுகாப்பான வாழ்வுக்கும் இது பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது எனவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இலங்கை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை குறித்து லண்டன் ஐ.பி.சி. வானொலிக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவற்றைத் தெரிவித்திருக்கிறார்.

இலக்கைத் தீவை பெரும் நெருககடிக்குள் ஆழ்த்தியிருக்கும் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் மனப்பக்குவம், தொடர்ச்சியான பங்களிப்பும் சிங்கள அரசியல் தலைவர்களிடம் இல்லை எனக கூறியுள்ள அன்ரன் பாலசிங்கம், மீண்டும், மீண்டும் சிங்கள மக்களிடம் ஆணைபெற எடுக்கப்படும் முயற்சிகள் இந்த அரசில் வெறுமையையும், ஆற்றாமையையும் எடுத்துக்காட்டுவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சிங்கள ஆளும் வர்க்கம் மத்தி

(16ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் கூட்டத்தில் காங்கிரஸ் பங்குபற்றாது

### செயலாளர் நாடு திரும்பிய பின்னரே போட்டி குறித்து முடிவு

யாழ்ப்பாணம்,பெப்.10

தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக ஆராய்வதற்காக தமிழ்க்கூட்டமைப்பினால் இன்று கூட்டப்படும் கூட்டத்தில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி பந்குபற்றமாட்டாது.

தமிழ்க் கூட்டமைப்பு ஒரே அணியாகப் போட்டியிடுவது குறித்து ஆராய்வதற்காக காங்கிரஸ் கட்சி நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் கூடி ஆராய்ந்த போதே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

கட்சியின் பொதுச்செயலாளர் ஜீ.ஜீ.கஜேந்திரகுமார் லண்டன் சென்றுள்ளதால், தேர்தலில் போட்டியிடுவது குறித்து முடிவு செய்யமுடியாதுள்ளது. எனவே, அவர் நாடு திரும்பிய பின்னரே அது குறித்து முடிவு செய்யவேண்டியிருக்கிறது. இதனால் கூட்டமைப்பின் கூட்டத்தில் பங்குபற்றுவதில்லை என்று முடிவு செய்துள்ளோம் என காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை மாவட்டத்தில் 4 தமிழ்க்கட்சிகள் ஒரே அணியாகப் போட்டியிடத் தீர்மானம்

### இலட்சியத் தேர்தலாகக் கருதிப் பிரசாரம் செய்வர்

கன்னியா,பெப்.10

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழழ விடுதலைக்கழகம் (ரெலோ), அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (சுரேஸ் அணி) என்பன ஒரே அணியின் கீழ் போட்டியிடுவது எனத தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தமிழ்மக்களின் இலட்சியத்தேர்தல் என்ற உணர்வில் தன்னிச்சையான செயற்பாடுகள் எதுவும் அற்ற நிலையில் பிரசாரம் செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் இரா.சம்பந்தன், க.துரைரெட்ணலிங்கம் (ரெலோ) தமிழீழ விடுதலைக கழகத்தின் சார்பில் கன லோகீஸ்வரன், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் சதா, சண்முகநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சார்பில் க.ரகுநாதன் ஆகியோர் நேற்றுத் திருகோணமலையில் கூடி இது குறித்துப் பேசியுள்ளனர்.

விடுதலைப் புலிகள் அமைப்புப் பிரதி

(16ஆம் பக்கம் பார்க்க)



திருமலையில் நேற்று இடம்பெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் பங்கேற்றோர்.

## நெதர்லாந்து இராஜதந்திரிகளுடன் தமிழ்ச்செல்வன் குழுவினர் பேச்சு



கிளின்ஜென்டல்,பெப்.10

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நெதர்லாந்து நாட்டின் வெளிவிவகாரத்துறை இராஜதந்திரிகளை நேற்றுச் சந்தித்துக் கலந்துரை யாடினார்.

நெதர்லாந்து வெளிவிவகார அமைச்சகத்தைச் சேர்ந்த ஹரிவன் பீக் தலைமையிலான இராஜதந்திரிகள் குழுவினருடனேயே சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் பேச்சு நடத்தினர்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமானத் தேவைகள் குறித்தும் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான உதவிகள் குறித்தும் இரு தரப்பினரும் ஆராய்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.(ஓ-9)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் வடக்கு - கிழக்கு சுற்றுப்பயணம்

கொழும்பு,பெப்10

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புரு கொவ்டே வடக்கு - கிழக்கின் நிலைமைகளை நேரடியாக ஆராய்வதற்கான சுற்றுப் பயணத்தை நேற்று ஆரம்பித்தார்.

தனது சுற்றுப் பயணத்தில் முதற்கட்டமாக நேற்று அவர் திருகோணமலைக்குச் சென்றார். அங்கு அவர் மாவட்ட கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் தென்னக்கோன், அரச அதிபர் காமினி ரொட்ரிகோ, கடற்படை உயர் அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து உரையாடினார். நேற்றுப் பிற்பகல், விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல் துறையினரை அவர் சந்தித்தார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் இன்று மட்டக்களப்புக்கும், நாளை அம்பாறைக்கும் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாடு சென்றுள்ள புலிகளின அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அடுத்த வாரமளவில் வன்னி திரும்புவார் என்று நம்பப்படுவதாகவும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் தலைமையில் ஐ.தே.மு.கூட்டம்

கொழும்பு,பெப்.10

ஐக்கியதேசிய முன்னணியின் முக்கிய கூட்டமொன்று இன்று காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும்.

முன்னாள் எம்.பிக்கள், தொகுதி அமைப்பாளர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வர் எனத் தெரிவிக்கப் பட்டது.

திடீர் பொதுத்தேர்தலுக்கு முகம் கொடுப்பது, வேட்பாளர்கள் தெரிவு, பிரசார நடவடிக்கை என்பன தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்படுமென ஐ.தே.முன்னணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மின்கம்பத்தை சாய்த்த லொறி ஓடித் தப்பியது!

யாழ்ப்பாணம்,பெப்.10

வேகமாக வந்த லொறி ஒன்று வீதியோர மின்கம்பத்தை மோதி வீழ்த்தி விட்டு சென்று மறைந்தது. இந்தச் சம்பவம் நேற்றிரவு யாழ். ஸ்ரான்லி வீதி - கஸ்தூரியார் வீதிச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்றது. லொறி மோதியதில் கம்பம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## காபந்து அரசின் அமைச்சர்களின் எண்ணிக்கையிலும் ஜனாதிபதி வெட்டு!

### இடம்பெறுவோரை அறிவிக்க பிரதமரைக் கோருகிறார்

கொழும்பு,பெப்.10

இரு புதிய அமைச்சர்களை நியமித்து, நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அடுத்த நடவடிக்கையாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான காபநது அரசின் அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் வெட்டிக்குறைக்கவிருக்கிறார்.

காபந்து அரசின் அமைச்சரவை உறுப்பினர்களின் (அமைச்சர்களின்) எண்ணிக்கை 15 ஆக கட்டுப்படுத்தப பட வேண்டுமென்று பிரதமர் ரணிலிடம் ஜனாதிபதி எழுத்துமூலம் அறிவித்திருக்கிறார்.

இதன்படி அமைச்சரவையில் இடம்பெறும் அமைச்சர்கள் குறித்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த முறையைவிட அதிக வெற்றி இம்முறை கிட்டும் என்கிறார் பிரதமர்

கொழும்பு,பெப்.10

கடந்த பொதுத்தேர்தலில் கைப்பற்றிய ஆசனங்களைவிட இம்முறை அதிகமான ஆசனங்களை ஐக்கிய தேசிய முன்னணி கைப்பற்றும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நேற்று ஸ்ரீ கோத்தாவில் கூடி தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக ஆராய்ந்தது. அங்கு கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் பேசிய போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறி

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ஊர்காவற்றுறை பிரதேசச்செயலக புதிய கட்டடம் நாளை திறப்பு

ஊர்காவற்றுறை,பெப்.10


ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை முன்பாக புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை பிரதேச செயலகக் கட்டடம் நாளை புதன்கிழமை காலை வைபவரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பிரதேச செயலகக் கட்டடத்தைத் திறந்து வைப்பார்.

சுமார் ஒன்றரை கோடிரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடத்தின் நிர்மாணப்பணிகள் அனைத்தும் தற்பொழுது பூர்த்தியடைந்ததையடுத்து கட்டடம் திறந்துவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் மேற்படி பிரதேச செயலகம் பாலாவி வீதியிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றில் தற்காலிகமாக இயங்கிவந்தது தெரிந்ததே. நாளை முதல் அதன் பணிகள் யாவும் புதிய செயலகக் கட்டடத்தில் ஆரம்பமாகும். இதேவேளை -

இந்துகலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் வடக்கு-கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் வழங்கிய ஒரு தொகுதி நூல்கள் நாளைய நிகழ்வில் வைத்து ஊர்காவற்றுறைப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலைகள், அறநெறிப்பாடசாலைகள் என்பவற்றுக்கு வழங்கப்படுமென உதவி அரச அதிபர் ஜே. எக்ஸ்.செல்வநாயகம் தெரிவித்தார். (எ-16-73)



அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் நினைவுநாளை முன்னிட்டு யாழ். குருநகரில் உள்ள அன்னாரின் சிலைக்கு தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் உபதலைவர்களில் ஒருவரான சீ.வி.கே.சிவஞானம் மாலை அணிவிக்கிறார். கட்சித் தலைவர் அ.விநாயகமூர்த்தி உட்பட நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

# அமரர் ஜீ.ஜீ.இன் நினைவுதினநிகழ்வுகள்

குருநகர்,பெப்10

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நிறுவனத் தலைவருமான அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 27 ஆவது நினைவுதினம் நேற்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதனையொட்டி குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள அன்னாரது உருவச்சிலைக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவர் அ.விநாயகமூர்த்தி, உபதலைவர்களில் ஒருவரான சி.வி.கே.சிவஞானம், செயற்குழு உறுப்பினர்களான க.மயில்வாகனம், து.மரியரத்தினம் ஆகியோர் உட்படப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

சி.வி.கே.சிவஞானம், க.மயில்வாகனம் ஆகியோர் அன்னாரது சிலைக்கு மாலை அணிவித்தனர்.

இதேவேளை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்.தலைமைக் காரியாலயத்தில் அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்துக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும், கூட்டணிப் பிரமுகருமான செல்லையா விஜயரட்ணம் தலைமையில் இந்த நினைவுகூரல் நிகழ்வு இடம்பெற்றது. இதில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி உட்பட கூட்டணிப் பிரமுகர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள். (ஒ-6-51)

# கடற்றொழிலாளர் சம்மேளனம் நேற்று அங்குரார்ப்பணம்

குருநாகல்,பெப்.10

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சம்மேளனம் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. யாழ்பிரதான வீதியில் இந்த சம்மேளனத்துக்கான பணிமனையும் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

சம்மேளனத்தின் தலைவர் அ. அன்ரனி வென்சன்லோஸ் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. யாழ்மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொது முகாமையாளர் எஸ்.இராஜாராம், சம்மேளனத்தின் தலைவர் அ.அன்ரனி வென்சஸ்லோஸ் ஆகியோர் மங்கல விளக்கேற்றினார்கள். சம்மேளனத்தின் பெயர்ப் பலகையை சம்மேளனத்தின் தலைவர் அ.அன்ரனி வென்சஸ்லோஸ் திரைநீக்கம் செய்துவைத்தார். இதனைத் தொடர்ந்து சமாசப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டம் சம்மேளனத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. கடற்புலிகளின் யாழ். அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். இனியவன், யாழ்.மாவட்ட நீரியல் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அயோசப், யாழ்கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வே.கனகசபாபதி, கூட்டுறவுப் பரிசோதகர் எஸ்.திருச்செல்வம், கடற்றொழில் பரிசோதகர் நீ.விகனேஸ்வரன் மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகள், அங்கத்தவர்கள் ஆகியோர் உட்படப் பலரும் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். (ஒ-51)

# அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்க ஜனாதிபதி கோருவது வேடிக்கையானது!

## அமைச்சர்கள் நியமனம் ஜனநாயகத்துக்கு சாவுமணி என்கிறார் பீரிஸ்

மக்கள் ஆதரவுபெற்ற ஓர் அரசின் அமைச்சரவை உறுப்பினர்களின எண்ணிக்கையைக் குறைக்கும்படி ஜனாதிபதி கோருவது வேடிக்கையானதாகும். அதேவேளை, மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு கட்சியின் இரு உறுப்பினர்களை அமைச்சர்களாக ஜனாதிபதி நியமிப்பது ஜனநாயகத்திற்கு அடித்த ஒரு சாவுமணியாகும் என்று அரசியல் விவகார அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ஜீ.எல்.பீரிஸ் கூறினார்.

நேற்றுக்காலை அரசாங்கப் பேச்சாளர் அலுவலகத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

நேர்மையானதும் சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்று நடைபெறுமா என்பதை ஜனாதிபதியே கேள்விக்குறியாக்கிவிட்டார்

எவ்வழியிலாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்ற ஒரே சுயநல நோக்குடனேயே சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழுவை இயங்கவிடாமல் அவர் திட்டமிட்டு தடுத்து வந்துள்ளார்.

எப்படியான தில்லுமுல்லுகளைச செய்தாவது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டும் என அவர் திட்டமிட்டே செயற்பட்டு வந்துள்ளார் என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

அரசைக் கவிழ்க்கும் எல்லா முயற்சிகளும் தோல்வியடையவே தடுமாற்றமடைந்த ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டார். இது ஜனநாயக விரோதமான ஒரு செயலாகும்.

2001 செப்ரெம்பர் மாதம் பெரும்பான்மையை இழந்தபோது நாடாளுமன்றத்தைக் கலைத்தார். ஆனால், இப்போது நாடாளுமன்றத்தில், பெரும்பான்மை இருக்கும்போது கலைக்க வேண்டிய அவசியமே இல்லை.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பெரும்பான்மை பலமுடைய அரசை அதன் ஆட்சிக்காலம் முடியும்வரை கலைக்க மாட்டேன் என எழுத்து மூலம் உறுதியளித்த ஜனாதிபதி தனது உறுதிமொழியைப் பறக்கவிட்டுவிட்டார்.

இப்பொழுது இருக்கும் அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 15 ஆகக் குறைக்கும்படி கேட்டுள்ளார் என ஜனாதிபதி செயலகமும் அவரது கட்சியினரும் கூறுகின்றனர். ஆனால், இந்த நிமிடம்வரை பிரதமருக்கு அப்படியான கடிதம் எதுவும் கிடைக்கவில்லை.

ஜே.வி.பியினருடன் நன்னடத்தை அரச அமைத்தபோது அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 25 ஆகவாவது வைத்துக் கொள்கிறேன் என ஜே.வி.பியினரிடம் மண்டியிட்ட ஜனாதிபதி, இப்போது அமைச்சரவையைக் குறைக்கும்படி கேட்பது வேடிக்கையானதாகும்.

ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு ஒரு சர்வாதிகாரியாகவே செயற்படுகிறார்.

- இவ்வாறு அமைச்சர் பீரிஸ் குற்றஞ்சாட்டினார்.

## அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களின்

# அரச வாகனங்களை 48 மணிநேரத்தில் கையேற்கும்படி ஜனாதிபதி பணிப்புரை

அமைச்சரவை அந்தஸ்தில்லா அமைச்சர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட சகல வாகனங்களையும் கையேற்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணிப்புரை விடுத்திருக்கிறார்.

அந்த வாகனங்களை 48 மணி நேரத்துக்குள் கையேற்க ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருக்கிறார் என்று சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கிறார்.

அமைச்சரவை அந்தஸ்தில்லாத அமைச்சர்களின் எண்ணிக்கை 34 ஆகும். பிரதியமைச்சர்களின் எண்ணிக்கை 36.

ஊழல் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர்கள் அமைச்சுப் பதவிகளிலிருந்து அகற்றப்படுவர் எனவும் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்திருக்கிறார்.

"48 மணி நேரத்தில் வாகனங்களைக் கையளிக்காதோரின் வாகனங்களை இராணுவத்தை அனுப்பியாவது கையேற்கச் செய்வோம்" எனவும் அவர் கூறியிருக்கிறார்.

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம்,பெப்.10

சுழிபுரம் கப்பனை அம்பாள் ஆலய அலங்கார உற்சவத்தின் நிறைவுத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. இதில் பகல் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று நண்பகல் அன்னதானம் இடம்பெறும். மாலை வீதி உலா இடம்பெறும். (ஒ-28)

★ ★ ★

கோப்பாய்,பெப்.10

கோப்பாய், பலானை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறும். மாலை பூந்தண்டிகையில் சுவாமி வீதி வலம் வருவார். (ஒ-72)

★ ★ ★

வடமாராட்சி,பெப்.10

பருத்தித்துறை கொட்டடி ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை ரதோற்சவமும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ஒ-173)

★ ★ ★

வடமராட்சி,பெப்.10

துன்னாலை கோவிற்கடவைப் பிள்ளையார்கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இம்மஹோற்சவத்தில் ரதோற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்தோற்சவம் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் இடம்பெறும். (ஒ-173)

## அம்பாறை மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பில்

# தமிழ் பேசும் வேட்பாளர்களை போட்டியிடச் செய்ய முயற்சி

கொழும்பு,பெப்.10

எதிர்வரும் பொதுத்தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் சிங்களவர் எவரையும் நிறுத்தாது, தமிழ் பேசும் வேட்பாளர்களை மாத்திரம் போட்டியிடச் செய்வதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கேதுவாக ஐ.தே.க. அம்பாறை மாவட்டப் பிரதம அமைப்பாளரும், அமைச்சருமான பி.தயாரத்னவை தேசியபட்டியல் மூலம் எம்.பியாக நியமிக்கலாம் எனக் கட்சித்தலைமைப்பீடத்திற்கு ஆலோசனை கூறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஐ.தே.கட்சியின் சார்பில் சிறுபான்மை இனத்தைச்சேர்ந்த ஒருவரை தேர்தலில் வெற்றிபெறச்செய்வதே இம்முயற்சியின் நோக்கமாகும். இதனால், அம்பாறை மாவட்ட முன்னாள் ஐ.தே.க.எம்.பி. மயோன் முஸ்தபா தலைமையில் பத்து சிறுபான்மையினரை உள்ளடக்கிய வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதற்குக் கட்சித்தலைமைப்பீடம் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்பத்து வேட்பாளர்களில் குறைந்தது மூவர் தமிழர்களாகவும், ஏனையோர் முஸ்லிம்களாகவும், இருப்பர் எனக் கட்சிப்பிரமுகர் ஒருவர் சொன்னார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்ற சில முக்கிய புள்ளிகளும் அம்பாறை மாவட்டத்தில் ஐ.தே.க. வேட்பாளர்களாகப் போட்டியிடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான பேச்சுகள் திரைமறைவில் இடம்பெற்று வருகின்றன என்றும் கூறப்படுகின்றது.

# சு.க.–ஜே.வி.பி. தலைவர்கள் கூடி பொதுத் தேர்தல் குறித்து ஆராய்வு

கொழும்பு,பெப்.10

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதையடுத்து சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. தலைவர்கள் முதல் தடவையாகக் கூடி அரசியல் நிலை, பொதுத்தேர்தல் ஆகியவை குறித்து ஆராய்ந்துள்ளனர். நேற்றுமுன்தினம் இக்கூட்டம் நடைபெற்றது. சு.க.சார்பில் ஊடகத்துறை அமைச்சரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர், எதிர்க்கட்சியின் முன்னாள் பிரதம அமைப்பாளரான மங்கள சமரவீர ஆகியோரும், ஜே.வி.பி. சார்பில் அதன் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, செயலாளர் டில்வின் சில்வா, பிரசாரச்செயலாளர் விமல் வீரவன்ஸ ஆகியோரும் கூட்டத்தில் பங்குபற்றினர்.

பொதுத்தேர்தலின் பின்னர் நிறுவப்படும் அரசு குறித்து கூட்டத்தில் விசேடமாக ஆராயப்பட்டது. புதிய அரசு பொதுமக்களுக்குப் பொறுப்புள்ளதாக நடந்துகொள்வது குறித்தும் அவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

# யாழ்.பஸ்நிலையச்சூட்டுச்சம்பவம்; இராணுவச் சிப்பாய்க்குப் பிணை

யாழ்ப்பாணம்,பெப்.10

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி யாழ்.பஸ்நிலையத்தில இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று கூறப்படும் சிப்பாய் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாயான நாகொட விதான என்பவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இராணுவத்தரப்பில் ஆஜரான சட்ட ஆலோசகர் கப்டன் குறாப்பு மேற்படி சம்பவம் தொடர்பாக மேற்கொண்ட விசாரணை அறிக்கையை அப்போது நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

பிரஸ்தாப சிப்பாயை பிணையில் விடுமாறு அவர் மனுவையும் தாக்கல் செய்தார்.

இதனையடுத்து 512 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி, மற்றும் ஒரு கேணல் தர அதிகாரி ஆகிய இருவரினதும் தலா ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் பிரஸ்தாப சிப்பாய் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

இப்பிணை செலுத்தப்படாததால் தொடர்ந்து அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஒ-3)

# ஊரெழு வயோதிபர் கொலை: மேலும் இருவர் நீதிமன்றில் சரண்!

யாழ்ப்பாணம்,பெப்.10

ஊரெழுவில் கடந்த மாதம் 27 ஆம் திகதி வயோதிபர் ஒருவர் கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக மேலும் இருவர் மல்லாகம் நீதிமன்றத்தில் சரண் அடைந்துள்ளனர்.

சட்டத்தரணி எஸ்.சபாநாதன் மூலம் சரணடைந்த இருவரையும் நாளைவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் திருமதி ச.இளங்கோவன் உத்தரவிட்டார்.

இக்கொலை தொடர்பாக ஏற்கனவே மூவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். பின்னர் மற்றொருவர் சரண் அடைந்திருந்தார். இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இளைஞர் ஒருவரைத் தாக்குவதற்காக நள்ளிரவு வேளை அவரது வீடுதேடிச் சென்ற கோஷ்டி அந்தப் பகுதியில் வைத்தி தில்லையம்பலம் என்ற வயோதிபரைத் தாக்கிக்கொன்றமை தெரிந்ததே. (ஒ-3)

யாழ்ப்பாணம்



### அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் களம் சூடு பிடிக்கிறது

# ராணுவத்தை விட்டு சொல்லிக் கொள்ளாமல் நழுவியவர் ஜோர்ஜ் புஷ் எனக் குற்றச்சாட்டு!

## ஜனநாயகக் கட்சியில் முன்னிலைக்கு வரும் ஜோன் ஹெரியின் கேள்விக் கணை

வாஷிங்ரன்,பெப்.10

எதிர்வரும் நவம்பரில் அமெரிக்காவில் இடம்பெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சை எதிர்த்துப் போட்டியிடக் கூடியவர் என எதிர்பார்க்கப்படும் செனட்டர் ஜோன் கெரி ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்த விவகாரத்தை புஷ்ஷுக்கு எதிரான தமது தேர்தல் பிரசார ஆயுதமாக மாற்றி வருகின்றார்.

அத்தோடு, வியட்நாம் போரில் வீர விருதுபெற்ற முன்னாள் இராணுவ வீரரான ஜோன்கெரி, இதே யுத்தத்தில் தேசியபாதுகாப்புப்படைச் சேவையில் புஷ் ஆற்றிய பங்களிப்பு குறித்து பரபரப்பான கேள்விகளை முன்வைத்திருக்கின்றார்.



ஹெரி

1972இல் வான் படையின் பாதுகாப்புச் சேவையில் இருந்த சமயம் லீவு பெறாமல் - சொல்லிக்கொள்ளாமல் - கடமைக்குச் சமுகம் தராது நழுவியவர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் என்று குற்றஞ்சுமத்தியிருந்தார்.

ஆனால், என்.பி.ஸி. தொலைக்காட்சியில், பத்திரிகையாளரைச் சந்திக்கும் நிகழ்ச்சியில் இவ்விடயம் குறித்து அவரிடம் கேட்கப்பட்டபொழுது தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஜனாதிபதி புஷ் மறுதலித்தார்.

"நான் எனது கடமையைச்செய்தேன், கௌரவமான சேவையிலிருந்து வெளியேறினேன்" என்றார். புஷ்.

ஆனால், இந்தப்பதில் திருப்திகரமானதாக இல்லை என்று செனட்டர் கெரி கூறியிருக்கிறார்.

"சேவையில் இருந்து கௌரவமாக வெளியேற அனுமதிக்கப்பட்டா என்பது சேவையில் இருந்து சொல்லிக்கொள்ளாமல் நழுவியது பற்றிய கேள்விக்குத் தகுந்த பதில் அல்ல. கேட்கப்பட்ட வினாவுக்கு - சேவையை விட்டு சொல்லிக்கொள்ளாமல் நழுவினாரா என்ற கேள்விக்கு அவர் இன்னும் விடை தரவில்லை" என்றார் கெரி.

ஈராக் மீது போர் தொடுத்ததற்கான நியாயத்தை அமெரிக்க ஜனாதிபதி பகிரங்கமாத் தெளிவு படுத்த வேண்டும் என்று ஜோன்கெரி முன்வைத்த கோரிக்கைக்கு என்.பி.ஸி. தொலைக்காட்சிப் பேட்டியில் ஜனாதிபதி புஷ் பதிலளித்தார்.

"ஈராக் தலைவர் சதாம் ஹுசைன் 'பேரழிவு தரும் ஆயுதங்களைத் தயாரிக்கும் வலுவைக் கொண்டிருந்ததினால்' நாம் போருக்குச்சென்றோம்" - என்று புஷ் குறிப்பிட்டிருந்தார்.

சதாம் ஹுசைன் பேரழிவு தரும் ஆயுதங்களைத் தயாரித்து வைத்திருக்கின்றார் என்று யுத்தம் தொடுத்த போது காரணம் கூறிய ஜனாதிபதி புஷ், இப்போது அத்தகைய ஆயுதங்களைத்தயாரிக்கும் வலிமையை சதாம் கொண்டிருந்ததால் தாங்கள் யுத்தத்தைத் தொடுத்தனர் என புதிய விளக்கம் அளித்திருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப்பதில் குறித்துக் கருத்து வெளியிட்ட ஜோன் கெரி, "ஜனாதிபதி புஷ் இப்போது புதுக்கதை விடுகிறார் என்பதல்ல பிரச்சினை 2002 இருந்தே அமெரிக்க மக்களுக்கு அவர் கதைவிட்டுக்கொண்டிருக்கின்றார் என்பது தான் முக்கியம்" - என்றார்.

இதற்கிடையில் -

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளரைத் தெரிவுசெய்வதற்காக அமெயினி மாநிலத்தில் நடந்த உட்கட்சித் தேர்தலிலும் செனட்டர் ஜோன் கெரி 50 வீதத்திற்கும் அதிக வாக்குளைப் பெற்று முதலாவதாக வந்தார். முன்னாள் வேர்மண்ட் ஆளுநர் ஹவார்ட்டீன் இரண்டாம் இடத்தைப் பிடித்தார்.

இதுவரை பன்னிரண்டு மாநிலங்களில் நடைபெற்ற உட்கட்சித் தேர்தல்களில் பத்து மாநிலங்களில் ஜோன் கெரியே வெற்றிபெற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜனநாயகக் கட்சி வேட்பாளர் தெரிவில் போட்டியிடும் ஏனையோரைப் பின்தள்ளி முன்னிலைக்கு வந்து கொண்டிருக்கும் கெரி, வேட்பாளர் தெரிவில் தனது நிலை உறுதியாகிவருவதையடுத்து தமது பிரசாரத் தாக்குதல் இலக்கைக் கட்சிக்குள் தன்னுடன் போட்டியிடும் ஏனையோரின் பக்கத்திலிருந்து ஜனாதிபதித் தேர்தலில் தம்முடன் போட்டியிடப்போகும் ஜனாதிபதி புஷ்ஷின் பக்கம் மெல்லத் திருப்பத் தொடங்கியிருக்கின்றார்.

## ஹெய்டி ஜனாதிபதிக்கு எதிராக உள்நாட்டில் பெரும் கிளர்ச்சி!

கரீபியன் நாடான ஹெய்டியில் ஜனாதிபதி ஜோன் பேட்டரண்ட் அரிஸ்டிட்டுக்கு எதிரான கிளர்ச்சி, வன்முறையாகப் பல நகரங்களுக்கும் பரவியிருக்கின்றது. இதனால் மிக மோசமான நிலைமையை அவர் எதிர்கொண்டு வருகின்றார் என அவதானிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

எண்பது லட்சம் சனத்தொகையைக் கொண்ட ஹெய்டி, பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழ்மைத்தீவு. அங்கு வறுமையும் நிர்வாகச் சீர்கேடுகளும் தலைவிரித்தாடுகின்றன.

200 ஆண்டுகளுக்கு முன்னர் சுதந்திரம் பெற்ற இந்த நாடு, அன்று முதல் தொடர்ந்து சிவில் யுத்தங்களாலும், சர்வாதிகார ஆட்சிகளினாலும், இரண்டு தடவைகள்அமெரிக்க ஆக்கிரமிப்பாலும் பாதிக்கப்பட்டு முன்னேற முடியாமல் தொடர்ந்து தடுமாறி வருகின்றது.

மோசடித் தேர்தல் ஒன்றின் மூலம அரிஸ்டிட் ஆட்சிக்குத் தெரிவானார் என்று தெரிவித்து அவரைப் பதவி விலகக்கோரி அங்கு மோசமான ஆர்ப்பாட்டங்களை எதிர்க்கட்சிகள் முன்னெடுத்து வருகின்றன.

அவற்றைத் தமது படைகள் மூலம் ஆயுத முனையில் ஜனாதிபதி அரிஸ்டிட் அடக்கமுனைந்ததை அடுத்து, இப்போது அவருக்கு எதிரான கிளர்ச்சி ஆயுத வழிக்குத் திரும்பியிருக்கின்றது.

கிளர்ச்சியாளர்கள் பல்வேறு நகரங்களிலும் சிறிய எண்ணிக்கைகளில இருந்த பொலீஸாரைத் துரத்தியடித்து விட்டு அந்த நகரங்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருக்கின்றார்கள்.

செயின்ட் மார்க் துறைமுகத்தைக் கட்டுப்பாட்டில்கொண்டு வந்த கிளர்ச்சியாளர்கள் அங்கு பல பாரிய கொள்கலன்களில் (ஹெண்டெயினர்களில்) இருந்து தொலைக்காட்சிப்பெட்டிகள், வானொலிகள், தானிய வகைகள் போன்றவற்றைச் சூறையாடிச் செல்வதையும் வெறுமையான கொள்கலனைத் தீயிட்டு எரிப்பதையும் செய்தி ஏஜென்சிகள் சில ஒளிபரப்பின.

(ம)

### கிளின்ரனுக்கு விருது

லொஸ்ஏஞ்சல்ஸ்,பெப்.10

சிறந்த இசை மற்றும் பாடலுக்கு அமெரிக்காவில் வழங்கப்படும் மிகப் பெரிய விருதான கிராமி விருது, அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்ரனுக்கு வழங்கப்படவுள்ளது.

அந்த விருதை ரஷ்ய முன்னாள் அதிபர் மிகையில் கொர்ப்பசேவ் மற்றும் பிரபல நடிகை சோபியா லாரன் ஆகியோருடன் பகிர்ந்து கொள்கிறார் கிளின்ரன்.

சாக்ஸபோன் இசைக் கருவியை இசைப்பதில் திறமை மிக்கவர் கிளின்ரன். ஆனால், அதற்காக அவர் விருது பெறவில்லை. மாறாக, சிறுவர்களுக்கான கதையை இசையுடன் கலந்து சிறப்பாகச் சொல்லியிருப்பதற்காகவே அவருக்கு கிராமி விருது வழங்கப்படுகின்றது.

பீற்றரும் ஓநாயும் என்னும் சிறுவர் கதையை இசையுடன் சிறப்பாகக் கூறியிருக்கிறார் கிளின்ரன். அவருடன் கொர்ப்பசேவும் சோபியா லாரனும் கதை சொல்லியுள்ளார்கள்.(ம)

### வேட்பாளரைக் காணவில்லை

ரஷ்ய அதிபர் தேர்தல் வேட்பாளர் இவான் ரிப்கினைக் காணவில்லை என்று அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

லிபரல் கட்சியைச் சேர்ந்த ரிப்கின் அதிபர் விளாடிமீர் புடினைக் கடுமையாக விமர்சித்து வருபவர். வியாழக்கிழமையிலிருந்து இவரைக் காணவில்லை என்று இவரது பிரசாரக் குழுவின் தலைவர் சினியா பனோமரியோவா தெரிவித்துள்ளார். (ம)

## இளவரசர் சார்ல்ஸ் ஈராக்குக்கு விஜயம்!



ஈராக்கில் இளவரசர்.

லண்டன்,பெப்.10

ஈராக்கில் பணியாற்றி வரும் பிரிட்டிஷ் படையினரை உற்சாகப்படுத்த இளவரசர் சார்ள்ஸ் அங்கு திடீர் விஜயம் செய்து திரும்பியுள்ளார்.

ஈராக்கில் பணியாற்றும் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் சிப்பாய்கள் கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகி வருவதாகக் கூறப்படுகின்றது.

அவர்களை உற்சாகப்படுத்தும் நடவடிக்கையில் அந்த நாட்டுத் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த நோக்குடன் அமெரிக்க ஜனாதிப்தி புஷ் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஆகியோர் திடீரென ஈராக்குக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

அதேபோன்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரும் ஈராக்குக்குச் சென்று திரும்பியிருந்தார். இப்போது இளவரசர் சார்ள்ஸ் அங்கு சென்று திரும்பியுள்ளார்.

ஈராக்கின் தெற்கில் பிரிட்டிஷ் படையினர் நிலைகொண்டுள்ள பஸ்ரா பகுதிக்குச் சென்ற இளவரசர் அங்கு படையினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அவர்களுடன் உணவருந்தினார்.

## அழகியின் குற்றச்சாட்டால் பெரு நாட்டில் பரபரப்பு!



காதலனுடன் மரியா

லண்டன்,பெப்.10

பெரு நாட்டின் அழகு ராணியான சாந்தா மரியாவை அந்த நாட்டு அதிபர் பாலியல் பலாத்காரம் புரிய முயன்றார் என்று குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தனது காதலருடன் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

லீமா நகரில் தொண்டு நிறுவனம் ஒன்று நடத்திய நிகழ்ச்சியில் சாந்தா மரியா கலந்துகொண்டார். அந்த நிகழ்ச்சி முடிந்த பின்னரே அவரை பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்த அதிபர் முயற்சி செய்தார் என்று அவர் கூறியுள்ளார்.

நிகழ்ச்சி முடிந்ததும் அழகி சாந்தா மரியாவை ஏற்பாட்டாளர்கள் அறை ஒன்றில் இருக்க வைத்துள்ளனர். அந்த அறையில் அதிபர் மட்டுமே அவருடன் கூட இருந்தார் என்று கூறப்படுகின்றது.

அந்த அறையில் அதிபர் ஒரு 'பட்டனை' அழுத்தியதும் இரகசிய அறையொன்றின் கதவு திறந்து கொண்டது. அதற்குள் கட்டில் ஒன்று இருந்த என்று சாந்தா மரியா செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்தார். அதன் பின்னர் நடந்த விவரங்களையும் அவர் செய்தியாளர்களிடம் விவரித்தார்.

அழகியின் குற்றச்சாட்டால் பெரு நாட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. ஆனால், அழகியின் குற்றச்சாட்டை அதிபர் மறுத்துள்ளார். அர்த்தமற்ற கூற்று என்று அவர் அதனை வர்ணித்துள்ளார்.

(ம)

## வடகொரியாவில் 60 லட்சம் பேர் உணவின்றி வாடும் ஆபத்து

நியூயோர்க்,பெப்.10

60 லட்சத்துக்கு மேற்பட்ட வட கொரியர்களுக்கு வரும் ஏப்ரல் மாதம் வரையில் அவசர - அவசிய உணவுப் பொருள்கள் கிடைக்காத நிலைமை உருவாகியுள்ளது என்று ஐ.நா. தெரிவித்துள்ளது.

நிதிப்பிரச்சினையே இந்த நிலைமை ஏற்படக்காரணம் என்று ஐ.நாவின் உலக உணவு நிறுவனம தெரிவித்துள்ளது.

அடுத்த இரண்டு மாதங்களில் சுமார் ஒரு லட்சம் பேருக்கான உணவு மட்டுமே இப்போது தம் கைவசம் இருக்கின்றது என்றும் அது தெரிவித்துள்ளது. அதுவும கூடுதலாக குழந்தைகள், பெண்கள், வைத்தியசாலைகளில் உள்ள சிறுவர்கள் ஆகியோருக்கு மட்டுமே வழங்கப்படக்கூடியதாக இருக்கின்றது.

வடகொரியாவின் கால்வாசிக்கும் அதிகமானவர்கள் ஐநாவின் உணவு உதவிகளைப் பெறுபவர்களாக இருக்கிறார்கள். கடந்த 9 வருடங்களாக இந்த நிலைமை தொடர்கிறது.



அந்த நாட்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம், மோசமான பொருளாதார முகாமைத்துவம், அதன் பெரிய உதவியாளராகத் திகழ்ந்த சோவியத் யூனியனின் வீழ்ச்சி என்பன உணவுத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான காரணங்கள் என்று கூறப்படுகின்றது.

"நீங்கள் வடகொரியர்களுக்கு உதவி செய்ய இருப்பீகளானால் அதனை விரைவில் செய்யுங்கள்" - என்று உதவி செய்யும் நாடுகளை உலக உணவு நிறுவன வடகொரியாவுக்கான பிரதிநிதி. உதவும் நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

நிதிப் பிரச்சினை மோசமான ஒரு காலகட்டத்தில் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

(ம)

## மூன்று கோரிக்கைகள் நிறைவேறின;

# பல்கலை. ஊழியர் போராட்டம் நேற்றுக் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் 15அம்சக் கோரிக்கைக ளில் முக்கிய மூன்று கோரிக்கைகள நிறைவேற்றப்பட்டதனை அடுத்து நேற றுப் போராட்டம் இடைநிறுத்தப்பட்டது.

பல்கலை ஊழியர்களின் பிரச் சினைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தலையிட்டனர். யாழ்.பல் கலைக்கழக நிர்வாகத்தினரும் ஊழி யர் சங்கத்தின் பிரதிநிதிகள் அடங் கிய குழுவினருக்கும் இடையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு யாழ்.பல்கலைக் கழக மாநாட்டு மண்டபத்தில் புலி கள் முன்னிலையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இதில் ஊழியர் சங்கத் தலைவர் சி.தங்கராஜாவினால் முக்கியமான மூன்று கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டன. பதில் பிரதம பாதுகாப்பு அதிகாரியை கடமையில் மீண்டும் அமர்த்துதல், புதிதாக நியமிக்கப் பட்ட கணக்குப் பதிவாளரை இடை நிறுத்துதல் மற்றும் கடந்த மாதம் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் போராட்டம் நடத்திய ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட சம்பளமற்ற விடுப்பை விசேட விடுப்பாக வழங்க வேண்டும் என்று தமது கோரிகை களை முன்வைத்தார்.

இந்த முக்கிய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன என்று ஊழியர் சங்கத் தலைவர் தெரிவித்தார். கணக் குப் பதிவாளரை இம்மாதம் 20ஆம் திகதியுடன் இடைநிறுத்துவது என் றும் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தவிர்ந்த ஏனைய கோரிக்கை கள் இம்மாதம் நடைபெறும் பல் கலைக்கழக மூதவைக் கூட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படும் என உறுதி அளிக்கப்பட்டது என்று அவா மேலும் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் யாழ் பல்கலை கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், விஞ்ஞான பீடாதி பதி பேராசிரியர் குமாரவடிவேல் மற்றும் விவசாய பீடாதிபதி பேராசி ரியர் இராஜதுரை ஆகியோரும் ஊழியா சங்கம் சார்பில் இருந்து சங்கத் தலைவர் சி.தங்கராஜா, சங்கத்தின் இணைப்பாளர் கலாறாஜ் மற்றும் சங்கத்தின் முன்னாள் செயலாளர் சகாயநாதன் ஆகியோரும் விடுதலைப் புலிகளின் சார்பில் கல்விக் கழகப் துணைப் பொறுப்பாளர் அருள்மாஸ் ரர், யாழ். மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், சர்வதேச மாணவர் பேரவையின் இணைப்பாளர் கண்ணன் மற்றும் யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப பாளர் கவியன்பன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம-6)

### வைத்தியர் விடுவிப்பு

அச்சுவேலி,பெப்.10

கருச்சிதைவு சம்பவம் தொடர் பாக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்ட தொண்டைமனாற்றைச் சேர்ந்த வைத்தியர் குற்றச்சாட்டி லிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலியைச் சேர்ந்த இளம தாய் ஒருவர் கருச்சிதைவு செய்து கொண்டதை அடுத்து மரணமடைந்த சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தொண்டை மனாற்றைச் சேர்ந்த அந்த வைத் தியர் விசாரணைகள் மூலம் குற்ற மற் றவர் என அறியப்பட்டதை அடுத்து குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட் டுள்ளார் என அச்சுவேலி பொலீஸ நிலையப் பொறுப்பதிகாரி அன்ரன் மத்யூஸ் அறிவித்துள்ளார். (ம-11)

# யாழ். கல்வியியற் கல்லூரியின் பயன்பாட்டுக்கென புதிய பஸ்

### வழங்குவதாக யாழ். அரச அதிபர் உறுதி

வலிகாமம் தெற்கு,பெப்.10

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற கல்லூரியின் செயற்பாட்டுக்கென புதிய பஸ் ஒன்றைப் பெற்றுக்கொடுக்க யாழ். அரச அதிபர் முன்வந்திருப்ப தாக தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள் பாடசாலைகளில் கற்பித்தல் பயிற்சி களை மேற்கொள்ளவும், பாடசாலை களுடன் இணைந்து புதிய கல்விச் செயற்றிட்டங்களை முன்னெடுக்கவும - தீவகம், வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம் மேற்கு போன்ற தூர இடங களில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்று புதிய கல்விச் செயற்றிட்டங் களையும் செயலநிலை ஆய்வுகளை யும் மேற்கொள்ளவும் இந்த பஸ் பயன படுத்தப்படுமென பீடாதிபதி தெரிவித் தார்.

தேசிய கல்வியியற் கல்லூரியின ஆலோசனைச் சபை உறுப்பினர்கள் அரச அதிபரைச் சந்தித்து கல்லூரியின அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரை யாடினார்கள்.

இக்கலந்துரையாடலின் போது நடப்பு ஆண்டு நிதி ஒதுக்கீட்டிலிருந்து 50இருக்கைகள் கொண்ட பஸ் ஒன்றை கல்லூரிக்கு வழங்குவதாக அரச அதி பர் உறுதியளித்துள்ளார். (ம-8-152)

# தீவக அம்புலன்ஸ் படகு நீரில் மூழ்கி வருகிறது

### உதிரிப்பாகங்கள் செயலிழக்கும் அபாயம்

ஊர்காவற்றுறை,பெப்.10

தீவகப் பகுதிகளில் இருந்து அவசர நோயாளர்களை ஏற்றி வரு வதற்கென அமைக்கப்பட்ட அம்புலன்ஸ படகு நீரினுள் மூழ்கிவருகிறது. இதனால், அதன் இயந்திர உதி ரிப்பாகங்கள் செயலிழக்கும் அபா யம் ஏற்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைத் துறைமுகத் தில் நிறுத்தப்பட்டுள்ள இப்படகு கவனிப்பாரற்ற நிலையில் இருப்பத னாலும், படிப்படியாக படகினுள் உட்புகும் நீரை வெளியேற்றாததனா லும், படகு நில மட்டம் வரை நீரி னுள் அமிழ்ந்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.

இதனால், அதன் இயந்திர அறை மற்றும் இதர பகுதிகளுக்குள் கடல் நீர் நிறைந்துள்ளதால் அவற்றில் உள்ள இயந்திர உபகரணங்கள் பழுதடையும் நிலை ஏற்பட்டுள்ளது. பல லட்சம் ரூபா செலவில் அமைக் கப்பட்ட இப்படகு அண்மையில் சுகாதார சேவைகள் திணைக்களத் திடம் கையளிக்கப்பட்டிருந்தது.

தீவுப்பகுதியில் வசிக்கும் மக் கள் அவசர நோயாளர்களை ஏற்றி வருவதற்கு பல்வேறு இன்னல்களை அனுபவித்து வரும் இவ்வேளையில, மேற்படி படகும் செயற்பாடற்ற நிலை யில் இருப்பது குறித்து பொதுமக் கள் விசனம் தெரிவித்துள்ளனர். (எ-16)

### முதலியார் வீதியை வர்த்தமானியில் பிரசுரிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்,10

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தினால் புதிதாகத் திறக் கப்பட்ட 'முதலியார் வீதி' விரைவில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நடவடிக்கையை வலி. தென்மேற்கு பிரதேசசபையின் செய லாளர் பி.விக்டர் மேற்கொண்டுள் ளார்.

கட்டுடை இடிகுண்டடியில் இருந்து மானிப்பாய் - கட்டுடை பிரதான வீதியை இணைக்கும் புதிய வீதியை மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளன நிர்வாகம் உருவாக்கியி ருந்தது. அதற்கு முதலியார் வீதி எனப்பெயரிட்டு மானிப்பாய் பிரதேச சபையிடம் கையளித்திருந்தது.

இவ்வாறு பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்ட முதலியார் வீதி யையே விரைவில் பிராந்திய உள் ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு பிரதேச சபை நடவடிக்கையை மேற் கொண்டுள்ளது. (8-185)

### மந்திகை ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி மிரட்டப்பட்டார்!

யாழ்ப்பாணம்,பெப்.10

மந்திகை ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் கதிர வேற்பிள்ளை கடந்த வார ஆரம் பத்தில் இரவு வேளை இனந்தெரி யாத கோஷ்டி ஒன்றினால் மிரட்டப் பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11மணிக்கு தனது வீட்டினுள் இருந்த வேளை மோட்டார்ச் சைக்கிள்களில் வந்த கோஷ்டியினர் முதலில் சிங் கள மொழியில் தன்னை அழைத்து கண்டபடி ஏசினார் எனவும் -

தொடர்ந்து தமிழில் ஏசிவிட்டு, தான் வெளியே செல்லாததால் கையில வைத்திருந்த வாளால் 'கேற்'றிற்கு உள்ளே நின்ற வாழையை எட்டி வெட்டிச் சரித்து விட்டுச் சென்றனர் என்றும் -

வந்தவர்கள் கறுப்புத்துணியினால் முகத்தின் அரைப்பகுதியை மூடிக் கட்டியிருந்தனர் எனவும் - தனது முறைப்பாட்டில் அவர் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக நெல்லியடிப் பொலீஸிலும், இலங்கை செஞ்சிலு வைச் சங்க பருத்தித்துறைக் கிளை யிலும் முறையிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-15)

## தவறிவிட்டது

**08.02.2004 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வேளையில் எமது 12 பவுண் நிறையுடைய தாலியும், கொடியும் முறிகண்டிப் பிள்ளையார் கோயிலடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவாகள்: *021 2263509* தொலைபேசி இலக்கத்துக்குத் தகவல்தரவும். சன்மானம் வழங்கப்படும்.**

(28303)

உ

## ஆச்சார்யாபிஷேக அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான சுபானு வருடம் தைத்திங்கள் 29 ஆம் நாள் (12.02.2004) வியாழக்கிழமை காலை 7.00 – 7.45 சுபமுகூர்த்த வேளையில் தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தில்

எனது சிரேஷ்ட புத்திரர்

**சாதக இளவரசு சிரஞ்சீவி சு.ஸ்ரீரங்கநாதன் ஐயா**

**கிரியையியல் டிப்ளோமா கற்கைநெறி**

**(சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி, திருநெல்வேலி)**

அவர்களுக்கு குருப்பட்டாபிஷேகம் நடத்த திருவருள் பாலித்துள்ளது. அவ்வமையம் இவ்விழாவில் கலந்துசிறப்பிக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

*தொல்புரம்,*
*வழக்கம்பரை, சுழிபுரம்.*

தங்கள் நல்வரவை நாடும்:
திரு. திருமதி
**சிவஸ்ரீ சு.சுந்தரராசக் குருக்கள் குடும்பத்தினர்.**

(C/33203)(34-18-17-32)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2003ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் 172 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்ற எமது பணிமனை (சுருவில், புளியங்கூடல்) கிராம அலுவலர் திரு.மு.விஜயரட்ணம் அவர்களின் செல்வப் புதல்வன்

**வி.விதூஷன்**

*அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.*

**உதவி அரச அதிபர் பணிமனை,**
**ஊர்காவற்றுறை.**

(சி-33199) (24-18-16)

**உதவி அரச அதிபரும்,**
**ஊழியர்களும்,**
**நலன்புரிச்சங்கம்.**

## கண்ணீர் அஞ்சலி

**கிருஷ்ணா வீடியே ஓடியோ ரெக்கோடிங் சென்ரர்**

**உரிமையாளர் உமாபதி அவர்களின்**

**அன்புத் தந்தையார்**

**கந்தசாமி** அவர்களின்

**மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.**

*சந்திரா வர்த்தக நிலையம்,*
*ஆனைக்கோட்டை.*

**தயாநிதி குடும்பத்தினர்.**

(C/33201))(35-18-16-24)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்களான



கணபதிப்பிள்ளை நாகேந்திரா



தர்மலிங்கம் செல்வகுமார்

ஆகிய இருவரும் 07.02.2004 அகால மரணமானதையிட்டு நாம் மிகவும் துயரமடைகிறோம். இவர்கள் இருவருக்கும் கண்ணீா அஞ்சலியைக் காணிக் கையாகச் சமர்ப்பிக்கின்றோம். இவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்தின ருக்கு எமது ஆழந்த அனுதாபங்களையும் தெரிவித்து, அவர்களின் ஆத் மாக்கள் சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- சக ஊழியர்கள்.

(28300)(3418-16-24) *ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை அச்சகம், யாழ்ப்பாணம்.*

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
ஸ்ரீ சுப்பிரமணிய அச்சக ஊழியர்களான

### கணபதிப்பிள்ளை நாகேந்திரா
### தர்மலிங்கம் செல்வகுமார்

ஆகிய இருவரினதும் திடீர் மரணச்செய்திகேட்டு நாம் மிகவும் அதிர்ச்சியும், வேதனையும் அடைகிறோம். அன்னார்களை இழந்துதவிக்கும் குடும்பத் தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவர்கள் இருவரினதும் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.

- அதிபரும், ஊழியர்களும்

(28299)
(34-18-16-24) **ஸ்ரீ /புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
12
௨
04
௨
1934



உதிர்வு
13
௨
01
௨
2004

### திருமதி சிவபாக்கியதேவி குமாரசாமி

உடுவிலைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியதேவி குமாரசாமி அவர்களது மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலமாக அனுதாபந் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் எதிர்வரும் (12.02.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவழியா
நினைவைத் தாங்கும்:
**அன்புக் கணவர்,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*விநாயகமுதலியார் வீதி,*
*பருத்தித்துறை.*
*T.P.: 0777 111354.*
(28297) (26-17-18-32)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# நாடாளுமன்றத் தேர்தல் அறிவிப்பால் சமாதான முயற்சிகள் முறியும் அபாயம்

## புதிய ஜனநாயகக் கட்சி அறிக்கை

கொழும்பு,பெப்.10

இலங்கை நாடாளுமன்றத்துக்குப் புதிய தேர்தல் நடத்தப்படுவதால் இதுவரை முன்னெடுக்கப்பட்டுவந்த சமாதான முயற்சிகள் முறியடிக்கப்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாகப் புதிய ஜனநாயகக் கட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இது குறித்து கட்சியின் பொதுச்செயலாளர் சி.க.செந்தில்வேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்துவதற்கு ஜனாதிபதி எடுத்த முடிவு அர்த்தமற்றதும் பயனற்றதுமாகும். நாடாளுமன்ற அதிகாரத்திற்கு வந்துகொள்ளும் ஒரே நோக்கத்துடனேயே பொதுத் தேர்தல் நடத்தப்படுகின்றது. அதற்கு அப்பால் நாட்டிற்கோ மக்களுக்கோ எவ்வித பலாபலனும் கிடைக்கப்போவதில்லை.

நாடு எதிர்நோக்கிநிற்கும் பிரதான பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கான அம்சங்களை முன்வைத்து ஆணைபெறும் நோக்கத்துடனோ அன்றி தொடரும் அரசியல் நெருக்கடிக்குக் காரணமான இன்றைய அரசியல் அமைப்பை மாற்றியமைக்கும் முடிவுடனோ இப்பொதுத் தேர்தல் நடத்தப்படவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை நாடாளுமன்ற அதிகாரத்தில் இருத்திக்கொள்ளும் நம்பிக்கையுடனேயே ஜனாதிபதி தேர்தலுக்கு திகதியிட்டுள்ளார். ஆளும் வர்க்க அதிகாரப் பசி தீர்க்கும் இத்தகைய பொதுத் தேர்தல் முடிவை எமது புதிய ஜனநாயகக் கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

நான்கு வருடங்களில் மூன்று பொதுத் தேர்தல்களை நாடு சந்திப்பது என்பது முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தின் இயலாமையையும் அரசியலமைப்பின் தனிநபர் சர்வாதிகாரத்தையுமே எடுத்துக் காட்டுகின்றது. அதுமட்டுமன்றி வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பாலும், கட்டண உயர்வுகளாலும், வற்வரி அதிகரிப்பாலும் மக்கள் கடுமையான வாழ்க்கை நிலைமைகளுக்குள் தள்ளப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், பொதுத்தேர்தல் மூலம் மக்களின் பணம் கோடிக்கணக்கில் அள்ளி இறைக்கப்பட இருக்கின்றது. இதனால், பாதிக்கப்படப்போவது இந்நாட்டின் சாதாரண உழைக்கும் மக்களேயாவர். அதேவேளை, இத்தேர்தல் பேரினவாதப் பிரசாரத்தை முடுக்கிவிடப்போகின்றது. அதனால் இதுவரை முன்னெடுக்கபட்டுவந்த சமாதான முயற்சிகள் முறியடிக்கப்படக் கூடிய அபாயம் வளரவே செய்யும்.

ஜே.வி.பியின் பௌத்த சிங்கள மேலாண்மைக்கான பிரசாரம் மேலோங்கவே போகின்றது. எனவே, எதிர்வரும் பொதுத் தேர்தலினால் நாட்டிற்கும் மக்களுக்கும் தற்காலிக யுத்த ஓய்வைப் பெற்றுள்ள தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கும் பாதகமான அம்சங்களே ஏற்படப் போகின்றன என்பதே உண்மையானதாகும். ஆதலினாலேயே ஜனாதிபதியின் பொதுத் தேர்தல் முடிவினை எமது புதிய ஜனநாயகக் கட்சி தவறான முடிவு எனக் கண்டிக்கின்றது - என்றுள்ளது.

# கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நிலையங்கள் எங்கு அமையும்?

## 14ஆம் திகதிக் கூட்டத்தில் ஆராயப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.10

கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்களுக்கான வாக்களிப்பு நிலையத்தை எங்கு அமைப்பது என்பது குறித்து தேர்தல் ஆணையாளருடன் யாழ். தேர்தல் அதிகாரி கலந்துரையாடவுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆராய தேர்தல் ஆணையாளர் தனது அலுவலகத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி கூட்டம் ஒன்றைக் கூட்டவுள்ளார்.

இக்கூட்டத்துக்கு சகல மாவட்டங்களில் இருந்தும் தெரிவத்தாட்சி அதிகாரிகளான அரச அதிபர்களும், பிரதித் தேர்தல் ஆணையாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவிருக்கும் யாழ். அதிகாரிகள் தமது பிரச்சினைகளை முன்வைப்பர்.

யாழ். தேர்தல் மாவட்டத்துக்குள் அடங்கும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 57ஆயிரத்து 957 வாக்காளர்கள் வாக்களிக்க எப்படி ஏற்பாடு செய்வது என்பது குறித்து யாழ். அதிகாரிகள் அப்போது கேள்வி எழுப்புவர்.

வாக்களிப்பு நிலையம் ஒன்றை அமைக்கவும் அந்த நிலையத்தில் பணிபுரியும் அரச அதிகாரிகளுக்குப் பாதுகாப்பு வழங்கவும் பொலீஸார் தேவை. கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு ஸ்ரீலங்கா பொலீஸார் பணிபுரிய வாய்ப்பு இல்லை.

இதற்கு மாற்றீடாக வாக்களிப்பு நிலையங்களை எங்கு அமைப்பது? வேறு ஏற்பாட்டின் பேரில் கிளிநொச்சியில் வாக்களிப்பு நிலையங்களை அமைக்கமுடியுமா? என்பன குறித்து தேர்தல் அதிகாரிகள் கூட்டத்தில் கேட்கவிருக்கின்றனர். (ம-3-5)

# குடாநாட்டில் வாக்களிக்க 6 லட்சம் பேருக்குத் தகுதி

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ். மாவட்டத்தில் 6லட்சத்து 44ஆயிரத்து 275பேர் இம்முறை நடைபெறும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் தகுதியைப்பெற்றுள்ளனர் என யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2002ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை கிளிநொச்சி உட்பட யாழ். மாவட்டத்திலுள்ள 11தேர்தல் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி சுமார் 6லட்சத்து 44ஆயிரத்து 275பேர் தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளனர்.

2001ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி சுமார் 6லட்சத்து 37ஆயிரத்து 66பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். அவர்களில் சுமார் ஒரு லட்சத்து 75ஆயிரம் வாக்காளர்களே கடந்த பொதுத் தேர்தலில் வாக்களித்தனர்.

இதேவேளை, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல்களை யாழ். மாவட்டத்தில் நடத்துவதற்கான ஆரம்பகட்டப் பணிகளை யாழ். மாவட்ட உதவித் தேர்தல ஆணையாளர் அலுவலகம் மேற்கொண்டு வருகிறது.

(ம-5)

# வன்னி மாணவர்களின் புலமைப்பரிசில் பெறுபேறுகளின் மேம்பாட்டுக்கு ஆசிரியர்களே காரணகர்த்தாக்கள்

## பாராட்டு விழாவில் புகழாரம்

மாங்குளம்,பெப்.10

"நீண்டகால இடைவெளியின் பின் வன்னிப் பாடசாலைகளில் புலமைப் பரிசில் பரீட்சையில் கூடியளவு மாணவர்கள் சித்தி பெறுவதற்கு அங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையே பிரதான காரணமாகும். பசி, தாகம் பார்க்காது மேலதிக வகுப்புகளை நடத்திவரும் ஆசிரியர்கள் மானசீகமாகப் பாராட்டப்பட வேண்டியவர்கள்".

சென்ற வருடம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் (தரம் 5) மாங்குளம் மகாவித்தியாலயத்திலிருந்து தோற்றி சித்தியடைந்த செல்வி வி.றெபேக்கா மற்றும் உயர் புள்ளிகளைப்பெற்ற மாணவர்களுக்கான பாராட்டுவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய பாடசாலை அதிபர் செல்வராணி விஜயகுமார் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

"கடந்த பல வருடங்களாகக் கொடிய யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து அல்லற்பட்ட வன்னிப் பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் இம்முறை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையே காரணம்.

எமது பாடசாலையில் நீண்ட இடைவெளியின் பின் ஒரு மாணவி சித்தியடைந்துள்ளார். பரீட்சைக்கு தோற்றிய 27 மாணவர்களுள் 75% மாணவர்கள் தேர்ச்சி மட்டத்திற்கு ஒன்று அல்லது இரண்டு புள்ளிகள் குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்றுள்ளனர். இவர்களைக் கற்பித்த ஆசிரியை இ.ரமணி பாராட்டப்பட வேண்டியவர். தரம் 3இல் இருந்து தரம் 5வரை கற்பித்த இவரைப்போன்ற ஏனைய வன்னிப்பிரதேச பாடசாலை ஆசிரியர்களும் பாராட்டப்படவேண்டியவர்கள்." என்றார் அவர்.

இதேவேளை - துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள துணுக்காய்க் கோட்டத்தில் 6 மாணவர்களும் அதே வலயத்தைச் சேர்ந்த மாங்குளம் கோட்டத்தில் இருந்து 4 மாணவர்களும் இந்தப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்களைப் பாராட்டிப் பரிசளிக்க துணுக்காய் வலய தமிழீழ மாணவர் அமைப்பு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-83)

### நாளை

தை 28
புதன்கிழமை
(11.02.2004)
திதி: பஞ்சமி
பகல் 11.33 வரை.
நட்சத்திரம்: சித்திரை
பின்னிரவு 2.31 வரை
சுபநேரம்: 5.04-6.34
ராகுகாலம்:12.34-2.04
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கடமையை நிறைவேற்ற அன்பு, தைரியம் என்ற இரண்டு வழிகாட்டிகள் உள்ளன. இரண்டும் ஒன்றுகூடிவிட்டால் ஒரு நாளும் வழி தவறுவதில்லை.

# தொல்காப்பியர் நாள் வழிகாட்டி புலவர் கழகத்தால் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.10

தமிழ் மொழியினதும், தொல்காப்பிய நூலினதும் தொன்மை, சிறப்பை எடுத்துக் கூறும் வகையில் "தொல்காப்பியர் நாள் வழிகாட்டி" வெளியிடப்பட்டுள்ளது.

ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ் புலவர் கழகம் இந்த நாள் வழிகாட்டியை வெளியிட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் இந்த நாள் வழிகாட்டி வெளியிட்டு வைக்கப்பட்டதாக கழகத்தின் செயலாளர் தமிழவேள் இ.க.கந்தசாமி அறிவித்துள்ளார்.

பயன்தரும் தொல்காப்பியப் பாக்கள், இந்த நாள் வழிகாட்டியில் அச்சிடப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (எ)

உதயன்

# சிங்கள ஆற்றாமையின் வெளிப்பாடே தேர்தல்

"இலங்கையின் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திடீரெனக் கலைத்திருப்பது இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள பெரும் பின்னடைவு."

- விடுதலைப் புலிகள் இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கின்றனர். புலிகளின் சார்பில் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இக்கருத்தைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்.

அமைதித் தீர்வு காண்பதற்கு சிங்களத் தலைமை தயாரில்லை என்பதையே இந்த நடவடிக்கை மீண்டும் உறுதிப்படுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கும் அவர், அதற்கான பின்னணியையும் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார்.

இலங்கைத் தீவை பெரும் நெருக்கடிக்குள் ஆழ்த்தியிருக்கும் தேசியப் பிரச்சினை இனப்பூசலாகும். தமிழ்மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் மனப்பக்குவமும், தொடர்ச்சியான பங்களிப்பும் சிங்கள அரசியல் தலைவர்களிடம் இல்லவே இல்லை. மீண்டும் மீண்டும் சிங்கள மக்களி[illegible]னை [illegible]ற எடுக்கப்படும் முயற்சிகள் இந்த அர[illegible] வெறு[illegible]மையையும் ஆற்றாமையையும் எடுத்துக் காட்டுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

கடந்த ஐந்தரை தசாப்த காலமாக - இந்த நாடு பிரிட்டிஷ் காலனித்துவத்திலிருந்து விடுபட்ட காலம் தொடக்கம் - இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாணும் முயற்சிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு வழிமுறைகளில் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், அவையெல்லாம் அரைவழி கடக்க முன்னரே பேரினவாத சாகரத்தில் மூழ்கி அடிபட்டுப்போய்விட்டன.

அந்தத் தொடர் சரித்திரத்தின் மற்றைய அத்தியாயம் இப்போது மேடையேறிக்கொண்டிருக்கின்றது.

தாம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அல்லது ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் எதிர்த்தரப்பை வீழ்த்துவதற்கு தென்னிலங்கைச் சக்திகள் தங்கள் பகடைக்காய்களாகப் பயன்படுத்துவது தேசியப் பிரச்சினையான இனப்பிணக்கைத் தான்.

அதனாலேயே இந்த விவகாரத்துக்குத் தீர்வு காணும் முயற்சிகள் பயன்தராமல் இழுபட்டுப்போகின்றன. இந்த இழுபறி நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையையும் கேள்விக்கு உள்ளாக்கி வருகின்றது.

இதனையே -

"சிங்கள ஆளும் வர்க்கத்தின் மத்தியில் நிலவும் வெறிபிடித்த அதிகாரப்போட்டியும், பகைமையும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நீதிவழங்க மறுக்கும் கடும்போக்கும் இலங்கையின் அரசியல் உறுதிநிலையை ஆழமாக ஆட்டம் காணச்செய்துள்ளன" என்று தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றார் பாலசிங்கம்.

பொதுத்தேர்தல் காலம் பொதுவாகவே பதற்றமும், மோதலும் வன்முறைகளும் நிறைந்ததுதான். அதுவும் கடந்தமுறை பொதுத்தேர்தல் தென்னிலங்கையில் மட்டுமல்லாமல் , வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் வன்முறைக் களமாக விரிந்ததை மறந்துவிட முடியாது. தீவகத்தில் பிரசார வேலைகளுக்குச் சென்ற தமிழ்க்கூட்டமைப்பு அணியினர் வெட்டியும், சுட்டும் குதறப்பட்ட கொடூரம் உட்பட இங்கு நிகழ்ந்த பயங்கரங்களைப் பட்டியலிடின் நீண்டுவிடும். தென்னிலங்கை நிலைமையோ மிகமிக மோசம்.

இந்த லட்சணத்தில், மீண்டும் பொதுத்தேர்தல் வந்திருக்கின்றது.

கடந்த இரண்டு தசாப்த காலமாகக் கொடூர இனப்போரில் சிக்கித் தவித்த இலங்கை இப்போதுதான் யுத்தநிறுத்தத்துக்கு மத்தியில் முதல்தடவையாகப் பொதுத்தேர்தலைச் சந்திக்கப்போகின்றது.

ஏற்கனவே அரசியல் தலைமைகளிடையேயான சமாதானப் பேச்சுகள் தடைப்பட்டு, இடைநிறுத்தப்பட்டு, முடங்கிப்போய்க் கிடக்கும் நிலையில் - இருதரப்பு அரசியல் தலைமைத்துவங்களிடையே சுமுகமான அரசியல் இணக்கநிலைமை இல்லாத பின்னணியில் - யுத்தநிறுத்தம் மட்டும் தட்டுத்தடுமாறி, பல்வேறு இழுபறிகள், குழப்பங்கள் மத்தியில் - தாக்குப்பிடித்து வருகின்றது.

இந்த நிலையில், தேர்தல் குழப்பங்களும் ஒன்று சேர யுத்தநிறுத்தம் என்னவாகுமோ என்ற இயல்பான அச்சம் மக்கள் மத்தியில் எழுந்திருந்தது. ஆனால், மக்களின் மனதைத் தெளிவுபடுத்தும் வகையில் திட்டவட்டமான அறிவிப்பை பாலசிங்கம் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

"கொழும்பில் அரசியல் நெருக்கடியும், குழப்பநிலையும் நிலவியபோதும், விடுதலைப் புலிகள் போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து இறுக்கமாகக் கடைப்பிடித்து சமாதானத்தை ஏற்படுத்துவதில் உறுதியாக இருப்பார்கள்" - என்று வாக்குறுதி வழங்கியிருக்கின்றார் புலிகளின் மதியுரைஞர்.

இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாண்பதற்கு உரிய வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்பதில் புலிகளுக்கு உள்ள உறுதிப்பாட்டை இந்தக்கூற்று மீண்டும் ஒருதடவை மெய்ப்பித்திருக்கின்றது.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர்1பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 11.02.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். குஞ்சுகள் கொள்வனவு செய்வோரிடம் இருந்து கோழிகள் கொள்வனவு செய்யப்படும். றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி, T.P. No:222 2867, 222 3529. (28231)

### திருமண சேவை

1978, மிருகசீரிடம் Norway இல் வதிவிட உரிமைபெற்று தொழில் புரியும் மணப்பெண்ணுக்கு படித்த, ஒழுக்கமுள்ள மணமகன் தேவை (Sponser உண்டு). தொடர்பு: துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (28231)

### வீடு வாடகைக்கு

4பேர் கொண்ட அரச ஊழியர் குடும்பத்திற்கு அனெக்ஸ் வீடு வாடகைக்கு உண்டு. 92, செம்மணி வீதி, நல்லூர். மாலை 3.00 மணிக்குப் பின். (28293)

## பருத்தித்துறை அரச மருந்தகம் எல்லா நாளும் இயங்குகிறது

பருத்தித்துறை,பெப்.10

பருத்தித்துறை அரசினர் மருந்தகம் (ரேவடி) விடுமுறை தவிர்ந்த எல்லா நாள்களும் இயங்கிவருகிறது.

இவ் வைத்தியசாலைக்கென மந்திகை அரசினர் வைத்தியசாலையில் பணியாற்றிய டாக்டர் திருமதி மங்கையர்மணி நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னைய காலத்தில் இவ்வைத்தியசாலை வாரத்தில் மூன்று தினங்கள் மட்டுமே இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-118)

## அன்பளிப்பு

வடமராட்சி,பெப்.10

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக்கு அந்த ஊரைச் சேர்ந்த ஆசிரியர் திருமதி ரி.சுரேந்திரநாதன் ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (ம-8-173)

## கோழிக்குஞ்சுகள் கொள்வனவில் அவதானம் தேவை

வலிகாமம் தெற்கு,பெப்.10

தென்இலங்கையில் இருந்து கொண்டு வந்து உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்யப்படும் கோழிக்குஞ்சுகள் தொடர்பாக அவதானமாக இருக்கும்படி கால்நடை வைத்தியப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலங்களில் சுன்னாகம், மருதனார்மடம் போன்ற சந்தைகளில் தென்இலங்கை வியாபாரிகள் சிலர் பேட்டுக்குஞ்சுகள் எனக் கூறி சேவல்குஞ்சுகளை அதிக விலையில் விற்பனை செய்து வரு வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவழித்துக் கோழிக்குஞ்சுகளை வாங்கி வளர்த்து வருவோர் அவை சேவல்களாக காணப்படுவதால் ஏமாற்றம் அடைந்து வருகின்றனர்.

தரமான கோழிக்குஞ்சுகளை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமோ, அச்சுவேலி கோழிப் பண்ணையில் இருந்தோ பெற்று வளர்க்குமாறும், சந்தைகளில் கொண்டு வந்து விற்கப்படும் போலிக் கோழிக்குஞ்சுகளை வாங்கி ஏமாற வேண்டாம் எனவும் கால்நடை வைத்தியப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (ம-152)


**வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கு**

**ஓர் அரிய சந்தர்ப்பம்!**

வீடியோ படப்பிடிப்புக்குரிய சகல உபகரணங்களும் மலிவு விலையில் விற்பனைக்கு

- வீடியோ கமரா (F.15, CCD Video)
- Portable Video deck NV-180 En
- Special Effect lenses
- TV Zoom lens 126mm
- Professional Tripod
- Monitor Colour T.V.
- Panasonic-Production Mixer
- Camera Lights

தொடர்பு:
28, சோமசுந்தரம் அவனியூ
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.:222-2379.
(C/33196)


## மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை கட்டடப் பணிகள் துரிதகதியில்!

செம்பியன்பற்று,பெப்.10

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையின் கட்டடப் பணிகள் துரிதகதியில் நடைபெற்றுவருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த கால யுத்தத்தினால் இவ் வைத்தியசாலை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தது. இதன் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் ஜூன் மாதமளவில் முடிவடைந்ததும் வைத்தியசாலை திறந்துவைக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வைத்தியசாலை தற்போது ஒரு தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவருகின்றது. இதற்கென வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-8-36)




**யாழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி**

தென்னிந்தியாவிலிருந்து பரம்பரை ஜோதிடர்

**திரு.P.T.R. அவர்கள்**

மூன்றாவது முறையாக யாழ் புண்ணிய பூமிக்கு வருகை

★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்சோதிடம்

பார்த்து உங்கள் எதிர்காலத்தை அறிந்துகொள்ள இன்றே ஜோதிடர் P.T.R. ஐ சந்திக்கவும்.

*இடம் :- பாலாஜி இன்*

293, கஸ்தூரியார் வீதி,
(கன்னாதிட்டிச் சந்தி அருகில்) யாழ்ப்பாணம். (28292)(32-14-24)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை உப அதிபர் திரு.க.அற்புதராஜா அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் கந்தசாமி**

அவர்களின் மறைவையொட்டித் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஆத்மா சாந்தி அடைவதாக!*

- அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்

(28289) (32-14-18-26)

## கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் ராஜபரமேஸ்வரி தகவல் தொழில்நுட்ப மையம்

மேற்படி மையத்தை நிர்வகிக்கக்கூடிய அனுபவமுள்ள, தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

விண்ணப்ப முடிவு திகதி: **15-02-2004**

செயலாளர்,
கொக்குவில் இந்துக்கல்லூரி ப.மா.ச.,
கொக்குவில்.
(சி-33193) (26-14-18)

## மனதாரப் பாராட்டுகிறோம்



எங்கள் அன்பான அழைப்பை ஏற்று எமது ஆலயத்துக்கு வருகைதந்து யாழ். அத்தியடிப் பிள்ளையார் ஆலய கணபதி கலாசார மண்டபத்துக்கு அடிக்கல் நட்டு கட்டட அமைப்புக்கு முதல் கட்டமாக 300 பைக்கற் சிமெந்தும் தொடர்ந்து 3லட்சம் ரூபாவும் அள்ளித் தந்து மேலும் பல உதவிகள் செய்வதாக உறுதியளித்த

இந்துசமய விவகார அலுவல்கள்
மாண்புமிகு முன்னாள் அமைச்சர்

**தி.மகேஸ்வரன்**

அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்து, அவரது இந்துவிவகாரப் பணிகள் தொடர அத்தியடிப் பிள்ளையாரின் அருள்வேண்டி நிற்கின்றோம்.

கோயில் நிர்வாகம்,
யா/அத்தியடிப் பிள்ளையார் கோயில்,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.
(28270) (26-14-18)


**இதோ! மூன்று படம் இலவசம்!!**

எமது நிறுவனத்தில் பிரதியாக்கம் செய்யும் சகலவிதமான புகைப்படச்சுருள்களுக்கும் மூன்று புகைப்படம் இலவசமாக வழங்கப்படும். உங்கள் புகைப்படச்சுருள்களைப் பெற்றுக்கொள்ள

| | |
|---|---|
| ஸ்கை எலக்ரோனிக்ஸ்<br>10, ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம். | லேன் சண்,<br>119, கண்டி வீதி,<br>சாவகச்சேரி. |

**மூர்த்தி ஸ்ருடியோ அன் கலர் லாப்**

பிரதான வீதி, மானிப்பாய்.
T.P:-021-222-2884
(28263)(37-18-14-26)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவனத்தில் தரம் 11இல் கல்விகற்கும் மாணவி செ.சுபாஜினி அவர்களின் அன்புத் தந்தையார்

**சதாசிவம் செல்லத்துரை**

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எலைற் கல்வி நிறுவனம்,
147, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (28291)(35-14-18-26)

- நிர்வாகி, ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## ஓராண்டு நினைவுப் பூக்கள்

அன்னை மடியில்
17 - 06 - 1929



ஆண்டவன் அடியில்
21 - 02 - 2003

**திருமதி தர்மலிங்கம் இரத்தினபூபதி**

திதி : 10.02.2004

*ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தாலும்*
*தாயென தரணியில் வந்துதித்த இரத்தின பூபதியே!*
*மாதம் பன்னிரண்டு ஓடோடி மறைந்தாலும்*
*மாதா எமைத்தேடி நீ ஓடோடி வருவாயோ?*

"உங்கள் ஆத்மசாந்திக்காக
ஆண்டவனை வேண்டுகின்றோம்"


10, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (28280)

*உங்கள் பிரிவால் வாடும்:*
மகன், மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(30-14-18-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு
14 - 02 - 1914



உதிர்வு
12 - 01 - 2004

கடந்த 12.01.2004 திங்கட்கிழமை
இறைவனடி எய்திய
எமது குடும்பத் தலைவர்

அமரர்

**பெரியதம்பி கந்தையா**

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள், நாளை (11.02.2004) புதன்கிழமை காலை 10மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளதால், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*மடத்துவெளி,*
*புங்குடுதீவு 07.* (28056)(14-18-26)

# வாசகர் திருமுகம்

## வீட்டுத் தொலைபேசிக்கும் 1,500 ரூபா வாடகையா?

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தொலைபேசி இணைப்புக்களைப் பெற விண்ணப்பித்து நீண்ட காலம் காத்திருந்த விண்ணப்பதாரிகள் பலருக்கு கடந்த ஆண்டில் இணைப்புக்கள் வழங்கப்பட்டன. வீட்டுப்பாவனைக்காக விண்ணப்பித்த பலருக்குக்கூட தொலைபேசி இணைப்பு அப்போது வழங்கப்பட்டது. ஆனால், அவ்வாறு இணைப்புப் பெற்றவர்களில் பலருக்கு அவா்களது முதல் மாத கட்டணப் பற்றுச்சீட்டு கிடைத்தபோது அதில் தொலைபேசிக்கான மாத வாடகை 540 ரூபா எனக் குறிப்பிடப்பட்டிருந்தது கண்டு அதிர்ச்சி அடைய நேரிட்டது. நான் எனது தொலைபேசியை வீட்டுப்பாவனைக்கு என்று தெளிவாக விண்ணப்பித்தே இணைப்புப் பெற்றேன். ஆனால், எனக்கும் வியாபாரத்திற்குரிய மாத வாடகைக்கட்டணமான 540 ரூபாவே அறவிடப்பட்டிருப்பது தெரியவந்தது. வியாபார நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படும் தொலைபேசிகளுக்கான மாதாந்த வாடகைக் கட்டணம் தற்போது 540 ரூபாவிலிருந்து 1500 ரூபாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. என்போன்ற வீட்டுப்பாவனையாளர்களுக்கும் இதே கட்டணமே மாத வாடகையாக அறவிடப்பட்டுவருகின்றது. இது பற்றி ரெலிகொம் அதிகாரிகளிடம் பல தடவை முறையிட்டும் வாடகைக் கட்டணம் குறைகக்கப்படவே இல்லை. தொலைபேசி அழைப்புக்களை எடுத்ததற்கான கட்டணத்தைவிட மாதாந்த வாடகை அதிகமாக இருப்பதால் என்போன்ற வீட்டுப்பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, ரெலிகொம அதிகாரிகள் இனியும் காலம் தாழ்த்தாது வீட்டு இணைப்புக்களுக்கான மாத வாடகையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இது தொடர்பாக 'உதயனுக்கு'மூன்று கடிதங்களை வரைந்துவிட்டேன். அவற்றுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. மக்கள் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் 'உதயன்' இந்தக் கடிதத்தையாவது வாசகர் திருமுகம் பகுதியில் பிரசுரிப்பானா?

*நாவலர் வீதி,*
*அரியாலை.*

**க.சி.கதிரேசு**

## வைரவர் கோவில் அறங்காவலரின் பதில்

'வைரவர் கோயில் அறங்காவலரின் பெருமனது' எனத் தலைப்பிட்டு கடந்த மாதம் 18ஆம் திகதி உதயனில் நல்லூரைச்சேர்ந்த ந.பரமேஸ்வரன் எழுதிய வாசகர் திருமுகம் தொடர்பாக, அதில் குறிப்பிட்ட ஆலயத்தில் அறங்காவலர் என்ற வகையில் சில விடயங்களை இங்கே தரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

கொண்டலடி வைரவர் ஆலயம் அமைந்துள்ள பிரதேசம் தொன்று தொட்டு இந்துக்கள் வாழ்ந்துவருகின்ற பகுதியாகும். சைவத்தை, சைவகலாசாரத்தை வளர்த்தெடுப்பதற்காக அறங்காவலர் பரம்பரையின் முன்னோர்களால் இந்த ஆலயம் அமைப்பதற்கான காணி வழங்கப்பட்டது.

ஆலய வீதியில் அமைந்துள்ள சனசமூகநிலையத்தில் ஒளிவிழா நடைபெற்றபோது பரமேஸ்வரன் என்பவருக்கு ஏற்பட்ட அனுபவத்தை அறிந்து சைவமக்கள் மிகவும் மனம் வருந்துகின்றனர். ஆலய அறங்காவலரான நானும் வருத்தமுற்றேன்.

பரமேஸ்வரன் தனது கடிதத்தில் குறிப்பிடப்பட்டது போன்று ஆலய அறங்காவலரின் பெருமனதுடன்தான் ஒளிவிழா அங்கு நடத்தப்பட்டுள்ளது. ஆனால், அடிக்கடி அங்கு நடைபெறும் இவைபோன்ற நிகழ்ச்சிகளுக்கு ஆலய அறங்காவலர்களது அனுமதி பெறப்படுவதில்லை.

ஆலயத்துக்கு மிக நெருக்கமாக உள்ள அந்த சனசமூக நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற நிகழ்ச்சிகள் சிலவேளைகளில் ஆலயச் சூழலின் அமைதிக்கும் - தூய்மைக்கும் - பங்கமாய் அமைவதாக பலர் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளனர். எனினும், ஒரு சனசமூக நிலையம் என்ற வகையில் அதன் சமூகமுன்னேற்றச்செயற்பாட்டுக்கு குறுக்கே நிற்க நாம் முயன்றதில்லை.

பரமேஸ்வரன் எழுதியது போல இந்து மதம் அனைத்து மதங்களையும் அரவணைத்துச்செல்லும் பரந்த மனப்பான்மையுடைய மதம் என்பதை இயன்றவரை வெளிக்காட்டி வந்துள்ளோம். பரமேஸ்வரன் போன்றவர்களுக்கு இந்தச் செய்தியைச் சொல்ல வேண்டிய அவசியம் இப்போது எமக்கு ஏற்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சனசமூக நிலையத்தை நிர்வகிப்போரின் வேறுசில நடவடிக்கைகளும் ஆலயத்துக்குப் பங்கம் ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளமை மிகவும் வேதனை தருவனவாகவும் உள்ளன.

*கொண்டலடி வைரவர் கோவில்,*
*சட்டநாதர் வீதி, நல்லூர்.*

**க.சி.இராஜேஸ்வரன்**
அறங்காவலர்

## ஆலடிச் சந்தி விரைவில் அரசடியாக மாறிவிடுமா?

யாழ்ப்பாணம் - பலாலி வீதியில், கந்தர்மடம் சந்திக்கும் பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில் உள்ள ஆலடிச்சந்தியில் (Y சந்தி) இந்திய இராணுவத்தைத் தாக்கச் சென்றவேளை ஏற்பட்ட விபத்தின்போது வீரமரணமடைந்த போராளிகளின் நினைவுத்தூபி உள்ளது. அந்த நினைவுத்தூபி அமைந்திருந்த இடத்தில் தற்போது இராணுவக்காவலரண்தான் உள்ளது. தற்போது அவ்விடத்தில் அரச மரக்கன்று நடப்பட்டுள்ளது. நீண்டகாலப் போக்கில் அது வளர்ந்ததும் அங்கு பௌத்த விகாரை கூட கட்டப்படலாம். அத்துடன், இதனால் ஆலடிச்சந்தி, அரசடிச்சந்தியாகவும் மாறிவிடலாம்.

அவ்விடத்தில் வீரச்சாவடைந்த போராளிகளின் நினைவு தினம் 14.04.2004 அன்று ஆகும். எனவே இதை உணர்ந்து அந்த நினைவிடத்தைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

*யாழ்ப்பாணம்.*

**செ. மணிவண்ணன்.**

# உரிமைகளை வழங்கக்கூடிய ஆட்சியாளர்களுடனேயே பேச்சு!

வவுனியா,பெப்.10

ஆட்சிக்கு யார் வருகின்றனர் என்பது முக்கியம் இல்லை. தமிழர்களுக்கு உரிமை வழங்கும் ஆட்சியாளர்கள் வருவதே முக்கியம்.

இவ்வாறு வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் நேற்றுமுன்தினம் வவுனியா மரககாரம்பளை பொது மண்டபத்தையும், ஈச்சங்குளம் நூலகத்தையும் திறந்து வைத்து உரையாற்றும்போது தெரிவிததுள்ளார். அவர் மேலும் உரையாற்றுகையில், இன்று தென் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமையினை நாம் மிக மிகவும் அவதானித்து வருகின்றோம். எமது மக்களின் அடிப்படை உரிமையினை வழங்கக் கூடிய ஆட்சியாளர்கள் யார்வந்தாலும் எமக்குப் பிரச்சினை இல்லை, எமது மக்களின் உரிமையை வழங்கக் கூடியவர்கள் வந்தால் எமக்கும் சரி. அவர்களுடன பேச்சு நடத்த நாம் தயாராக உள்ளோம் - இவ்வாறு எழிலன் மேலும் தெரிவித்தார். (எ-164)

# மதமாற்றத்தைத் தடுப்பதற்கு சர்வ மத சபை ஒன்று அவசியம்

**இலங்கையில் நடைமுறைக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருக்கும் மதமாற்றத் தடைச்சட்டம் தொடர்பாக இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்திருக்கும் அறிக்கை இது.**

எமது நாட்டில் அண்மைக்காலத்தில் மதம் சார் குரோதம் வளர்ந்து கொண்டு வருவது பற்றி எமது ஆழ்ந்த ஆதங்கததை வெளிப்படுத்துகின்றோம்.

இவ்வேளையில், ஒன்றுபட்ட இலங்கையில் சகல மத மக்களும் கௌரவத்துடனும் பரஸ்பர மரியாதையுடனும் சமாதானமாகவும் வாழ்வார்கள என்ற நம்பிக்கையை மீளவும் கூறி வைக்க விரும்புகின்றோம்.

தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலைக்கு ஒழுங்கு முறையற்ற மத மாற்றத்தினால் ஏற்பட்ட ஆதங்கமே காரணம் என்பதை உணர்கின்றோம். இதுபோன்று நெறியற்ற வழிகளைப் பயன்படுத்தி ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாற்றும் நடவடிக்கைகளுக்கு எமது எதிர்பைத் தெரிவிக்கின்றோம்.

நாம் மதங்களிடையே சந்தேகமற்ற ஒரு சிநேக பூர்வமான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமெனில் வலுவான வழிமுறைகளை வகுத்துக் கொள்வது முக்கியமானது. மதங்களிடையே ஒற்றுமையை உருவாக்கி அவற்றிடையேயான ஒரு வழிமுறையை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நெறிமுறையற்ற மதமாற்ற விடயத்தைக் கையாள்வதற்கு சட்டவாக்கம் கொண்டு வருவது தொடர்பான யோசனைகள் பற்றி நாம் விசனத்துடனும், கவனமாகவும் ஆராய்ந்துள்ளோம். இவ்வாறு ஒழுங்கு முறையற்ற மதமாற்ற நடவடிக்கைகளைக் குற்றமாக்குவது, நிலையை இன்னும மோசமாக்கவே செய்யும். உதாரணமாக நெறிமுறையற்றதெனக் கருதப்படும் நடவடிக்கைக்கு எதிராக குற்றவியல் வழக்கொன்று நாட்டின் ஒரு பகுதியில் நடத்தப்படுமேயானால், நீதிமன்ற எதிர்வாத நடவடிக்கைகளின் விளைவாக மதங்களிடையேயான உறவு பாரதூரமாகப் பாதிக்கப்படலாம். வழக்கு முடிவில் ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டாலும், அவர் தம் மதத்தின் மத்தியில் ஒரு வேத சாட்சியாகவே கருதப்படுவார். இத்தகைய செயற்பாடுகள் நிலைமையை முன்பிருந்ததைவிட மோசமானதாக மாற்றி மதங்களிடையே மாறாத வடுவை உருவாக்கலாம்.

### காரணங்கள் பல இருக்கலாம்

ஒருவர் மதம் மாறுவதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஒவ்வொரு மனிதனைப் பொறுத்தவரையிலும் மதமாற்றத்திற்கான காரணங்கள் தனிப்பட்டதாகவும், இணையற்றதாகவும் இருக்குமெனில் அது மிகையன்று. ஆகவே, ஒருவரது மத மாற்றத்திற்கான காரணங்கள் இவையாக இருக்கலாம் எனவும், இக்காரணங்கள ஏற்புடையனவல்ல எனவும் இக்காரணங்களை குற்றங்களாக்க வேணடுமென ஒருமனப்பட்டுக் கூறுவதும் முடியாத விடயமெனலாம்.

சகல மதங்களும் அவற்றைப் பின்பற்றுபவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் ஆறுதலைக் கொடுக்கின்றன. ஒரு மதம் ஒருவருக்குக் கொடுக்கும் எழுச்சி அவருக்கே உரித்தானது. ஆகவே, அவரது உள் நோக்கங்களின் நியாயத்தன்மை மீது மற்றவர்கள் நீதி பரிபாலனம் செய்ய முடியாது. ஈற்றில் அந்த உள் நோக்கங்களைச் சரிசெய்து ஒருமைப்படுத்தும் விடயத்தை அந்த நபரிடமே விட்டுவிட வேண்டும்.

தடுப்புச் சட்டங்கள் சில சந்தர்ப்பங்களில் சிறுபான்மை மதங்கள் மீதான துஷ்பிரயோகம், அலைக்கழிப்பு மற்றும் அச்சுறுத்தல் ஆகியவற்றிற்கான கருவியாக மாறலாம் என்பதையும் நாம் அறிவோம்.

## கத்தோலிக்க ஆயர் சபை முன்வைக்கின்ற யோசனை

இதனாலேயே தமிழ்நாட்டுச் சட்ட சபை மதமாற்றத்தை மட்டுப்படுத்தும் ஒரு சட்டத்தைக் கொண்டுவர முனைந்த பொழுது பௌத்தர்கள் கிறீஸ்தவர்களுடன் இணைந்து அதனை ஆட்சேபித்து எதிர்த்தனர். மேலும் அண்மைக் காலத்தில குஜராத்தில், பௌத்த சமயத்திற்கு மதம் மாறிய ஆயிரக்கணக்கானோர் இது போன்ற சட்டம் கொண்டுவரப்பட்ட பொழுது அதனை பகிரங்கமாக எதிர்த்து நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

குறுகிய நோக்கம் கொண்ட பெரும்பான்மை சட்டத்தை நிறைவேற்றியதன் மூலமாக ஒரு பாடத்தைப் படித்திருக்க வேண்டிய இலங்கையராகிய நாம், ஒத்த உந்துதல்களால் சமய ரீதியாக ஒருபிளவை ஏற்படுத்த முனைவது நன்றன்று. குற்றவியல், மான நஷ்ட சட்டத்தை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டது எமக்கு ஊக்கமளிக்கின்றது.

இவ்விடயத்தில் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் அடிப்படை உரிமையென ஏற்றுக்கொள்ளப்பட்டதும் மற்றும் "தர அமுல்படுத்தல்" சாதனமாக ஊடக முறைப்பாட்டு ஆணைக்குழு நியமிக்கப்பட்டதும் எமக்கு ஊக்கம் அளிக்கின்றது. இவ்வாறான தனி மனித சுதந்திரம் பற்றிய எமது நாட்டின் முற்போக்கான ஏற்பாடுகளைப் போன்று "நெறிமுறையற்றவை" எனக் கருதப்படும் மதமாற்றங்களைப பற்றிய முறைப்பாடுகளை விசாரிக்கவும், மதங்களுக்கிடையேயான ஒரு சபை நியமிக்கப்படவேண்டுமென நாம் சிபாரிசு செய்கின்றோம்.

மதங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சபையின் கண்டிப்பான வழிகாட்டல்கள், இவ்வாறான செயல்களுக்கு சிறந்த ஒருமாற்று வழியாக இருக்கும். மதங்களுக்கிடையேயான பரஸ்பர நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் சுட்டியெழுபபுவதற்கு இவ்வாறான சபை முன்முயற்சிகளுக்கு ஒத்துழைப்பினை வழங்குவோம். தற்போது எழுந்துள்ள மதங்களுக்கிடையேயான குரோத உணர்வை வளர்க்கும் சூழ்நிலையைத் தடுப்பதற்கு சட்டங்களைவிட இவ்வாறான நடவடிக்கைகள் ஒரு மேலான தீர்வாக அமையும் என நாம் கருதுகிறோம்.

### கட்டாயப்படுத்தல் இல்லை

கத்தோலிக்கத் திருச்சபையானது மதவேறுபாடின்றி இந்நாட்டில் சகல மக்களுக்கும் சேவை செய்கின்றதென்பதையும், மற்ற மதங்களைப் போல் எமது படிப்பினைகளையும் சகல மக்களுக்கும் தெரியப்படுத்த விரும்புகின்றோம். நாம் எவரையும் எமது சபைக்குச் சேருமாறு கட்டாயப்படுத்தவில்லை.

ஆனால், எந்தவொரு தனிமனிதரும் தாம் விரும்பும் மதத்தில் சேருவதற்கும், பின்பற்றுவதற்குமான உரிமையைக் கொண்டுள்ளனர் என்பதை வலியுறுத்துகின்றோம். சொல்லப்போனால் உலகிலுள்ள சகல மதங்களும் தம்வசம் மதம் மாறியோரைக் கொண்டுள்ளன. அன்றேல் அவை வளர்ச்சி பெற்றிருக்க முடியாது. இந்நாட்டிலிருக்கும் சகல முக்கிய மதங்களும் வேறு நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டு அந்நாட்டு மக்களால் தழுவப்பட்டவையே இன்றும் கீழைத்தேச மதங்களாகிய பௌத்தம், இந்துமதம், இஸ்லாம் ஆகியவை அவற்றைப் பரப்பும் நடவடிக்கைகளினாலேயே, இன்று மேலைத் தேசத்திலிருக்கும் பலரும் அவற்றைத் தழுவுகின்றனர்.

எமது மக்கள், தற்போதைய மத குரோதங்களைத் தாண்டி மற்றைய மதத்தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து தற்போதைய ஆதங்கங்களை மனதிற்கொண்டு ஏற்கனவே பிளவுபட்டிருக்கும் எமது சமூகத்தில் மேலும பிளவுகளை ஏற்படுத்தக் கூடியதும். எதிர் விளைவுகளைக்கொண்டுவரக் கூடியதுமான சட்டத்தை இயற்றுவதற்குப் பதிலாக, அர்த்தபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடியமதங்களுக்கிடையேயான ஒரு சபையை உருவாக்குவதற்கான நெகிழ்வுத் தன்மையைக் கொண்டுள்ளனர் என கத்தோலிக்க ஆயர் பேரவை நம்புகின்றது.

எமது நாட்டினதும் அதன் மக்களினதும் வேறுபாடுகளுக்கு மதிப்புக் கொடுத்து இன்னும் முக்கியமாக அதன பல்லின, பல்மத, பன்மொழித்தன்மைக்கு மதிப்புக்கொடுத்து ஒரே நாட்டின் மக்களென்ற ரீதியில் எமது சமுதாயத்தினை ஒன்றுபடுத்தி அதற்குள் இணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் நாம் ஈடுபட வேண்டும். ★

# கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை தொகுதிகளுக்கு 'ரிக்கட்'பெறப் போட்டி

## மு.கா.தலைவர் ஹக்கீமுக்கு பிரமுகர்கள் நெருக்குதல்

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, திடீர் பொதுத்தேர்தல் ஒன்றுக்கு திகதி அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களாகப் போட்டியிடுவதற்கு ரிக்கட் தருமாறு கேட்டு கட்சிப் பிரமுகர்கள தலைவா ரவூப ஹக்கீமுக்கு நெருக்குதல் கொடுத்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி தேர்தல் பிரசாரப்பணிகளுக்காக அங்கு தங்கியிருக்கின்ற மு.கா.தலைவரான அமைச்சர் ஹக்கீமை தமது ஆதரவாளாகள் சகிதம் சென்று தமக்கு தேர்தலுக்கான ரிக்கட் கிடைப்பதை உத்தரவாதம் செய்யுமாறு இப்பிரமுகர்கள் கோரியுள்ளனர்.

கல்முனைத் தேர்தல் தொகுதியில போட்டியிடுவதற்காக கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகமும், மறைந்த அஷரப்பின் இணைப்புச் செயலாளராகப் பணியாற்றியவருமான வை.எல்.எஸ். ஹமீதும், மர்ஹூம் அஷரப்பின் குடும்ப உறவினரும், நுஆவின் முன்னாள் செயலாளர் நாயகமுமான சிரேஷ்ட சட்டத்தரணி நிசாம் காரியப்பரும், சாய்ந்த மருதில் றெபியா பணிப்பாளர் எஸ். நிஜாமுதீனும் ரிக்கட் கேட்டிருக்கின்றனர்.

அதேபோன்று, சம்மாந்துறைத் தொகுதியில் அமைச்சர் ஹக்கீமின் இணைப்புச் செயலாளர் எம்.மன்சூரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு ரிக்கட கேட்டு வற்புறுத்தி வருகின்றார் என மு.கா.வட்டாரத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

ஞாயிற்றுக்கிழமை ஒலுவில் துறைமுக சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த அமைச்சர் ஹக்கீமை, மன்சூர் தலைமையிலான குழுவினர் சந்தித்து தமது கோரிக்கைக்கு அழுத்தம் கொடுத்தனர் எனவும் தெரியவருகின்றது. அடுத்த தேர்தலின்போது இவருக்கு ரிக்கட் தருவதாகக் கடந்த தேர்தலில் உறுதியளிக்கப்பட்டிருந்ததை இக்குழுவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, மு.காவில் புதிதாக இணைந்து கொண்டு கட்சியின் அரசியல் அமைப்புக்குழுவில் அங்கம வகிக்கின்ற ஐ.தே.க முன்னாள் உதவிச் செயலாளர் நௌஷாத்துக்கும் சம்மாந்துறை தொகுதியில் போட்டியிடுவதற்காக ரிக்கட்வழங்க வேண்டிய அவசியம் தலைவர் ஹக்கீமிற்கு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறான சிக்கல்களினால் மு.கா. நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவிவகித்த எச்.எம்.எம். ஹரிஸ்,எம்.ஐ. அன்வர் இஸ்மாயில் ஆகியோரைத திருப்திப்படுத்துவதில் மு.கா. தலைவர் ஹக்கீம் பெரும் சவாலை எதிர்கொள்ள நேரிடும் என கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஐ)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(C/33073-34-16-19)


## கைதடி பாலர் கல்விக் கழகம்

2003 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை

**பாராட்டி வாழ்த்துகின்றது**



இ.தாட்சாயினி (புள்ளி 136)



க.மகிந்தன் (புள்ளி 146)



இ.வக்சியா (புள்ளி 135)

கைதடி தெற்கு,
கைதடி.

(28245)(34-16-19)

ஆசிரியர்: க.இந்திரராசா.


**யப்பான் சைக்கிள்**

※ கியர், ஒட்டோமற்றிக் லைட், கப் பிறேக் போன்ற விசேட அம்சங்களுடன் பல மொடல்களில் யப்பான் சைக்கிள்.

※ போலியான பளபளப்புக்களை நம்பி ஏமாறாமல் குறைந்தவிலையில் கிடைக்கக் கூடியதும் சுலபமான ஓட்டத்திற்கு நீண்டகாலம் செலவின்றி பாவிக்கக் கூடியதுமான ஒரு சைக்கிளை வாங்குவதற்கு வாருங்கள்.

வந்து விட்டது புதிய கையிருப்பு

சித்தி விநாயகர் யப்பான் சைக்கிள்(B)பசார்

இல.631A, கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில் அருகில்).

(28261) (39-16-34-19)


## கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவு நாளை

எதிர்வரும் பொதுத்தேர்தல் தொடர்பான கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தி குறித்து நாளை புதன்கிழமை அதன் பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என அதன் செயலாளர் ராஜா கொல்லுரே நேற்றுத்தெரிவித்தார்.

சு.க. - ஜே.வி.பி.கூட்டு ஒப்பந்தம் குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்படுமென்றும் அவர் சொன்னார்.

## மாகாண சபையின் காலம் முடிவு

வடமேல் மாகாணசபையின் ஆட்சிக காலம் நேற்றுமுன்தினம் இரவுடன முடிவடைந்தது. அந்த மாகாணசபைக்கான தேர்தல் குறித்தும் அடுத்துவரும தினங்களில் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஒலிபெருக்கி மூலம் விளம்பர சேவை

மானிப்பாய் சந்தைப்பகுதியை மையப்படுத்தி ஒலிபெருக்கி மூலமான விளம்பர சேவை ஒன்று சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காலை 8 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை இச் சேவை செயற்பட்டுவருகிறது.(ஒ-90)

## சோமஸ்கந்தவுக்கு அத்திபாரமிட்ட தினநிகழ்வு

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரிக்கு நிறுவுநர் மழவராயர் கந்தையா அத்திபாரமிட்ட தினத்தைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.

கல்லூரியில் உள்ள சோமஸ்கந்தர் ஆலயத்தில் இடம்பெறும் விசேடபூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கல்லூரி வரலாறு குறித்த சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். (ஒ)


**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள பயன்படுத்திய மரநெசவுத்தறிகளும் நூல் சுற்றும் பொறியும் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் உடன் தொடர்புகொள்க:

சாரதா நெசவு நிலையம்,
நல்லூர் சட்டநாதர் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

(28260)


## ஒப்படைத்து உதவவும்

நல்லூர் றோட்டறக்ட் கழகத்தினுடைய இரண்டு புகைப்பட அல்பங்கள் 21.12.2003 ஆம் திகதியன்று நடைபெற்ற மானிப்பாய் றோட்டறக்ட் கழகத்துடனான இணைந்த கூட்டத்தில் தவறவிடப்பட்டுள்ளன. (மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில்) எனவே மேற்படி அல்பங்களை கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

Rtr.A.டிக்ஷன்

125, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.இல: 021 222 7613.

(C/33192)(34-16-19)

## பெற்றோருடனான சந்திப்பு

**ஞானக்குழந்தை கல்விக் கழகம்**

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோருடனான கலந்துரையாடல்

எமது கல்விக்கழகத்தில் ஆசிரியர் **திரு.வே.அன்பழகன** அவர்களிடம் 2003இல் கல்விகற்றும், பரீட்சை எழுதியும் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோருடனான கலந்துரையாடலில் அனைத்து மாணவர்களின் பெற்றோரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


காலம்: நாளை (11.02.2004) புதன்கிழமை
மாலை 5.00மணிக்கு

சிவன் வீதி, திருநெல்வேலி.

- இயக்குநர்.

(28273)(26-19-16-34)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 01 1928

மறைவு 09 02 1996

**அமரர் சதாசிவம் கனகலிங்கம்**

திதி: 10.02.2004


அன்புத் துணைவராய் பாசமிகு தந்தையாய்
எமக்கு நல்ல வழிகாட்டிய அன்புத் தெய்வமே!
நீங்கள் மறைந்து எட்டு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் அன்பு நினைவலைகள் எம்மைவிட்டு நீங்காது!

நெட்டிலிப்பாய், கோண்டாவில்.

-குடும்பத்தினர்.

(28179)(40-34-19-16)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அன்புடன் எம்மைக் காத்தீர்! ஆல் போல்
எம்மை வாழ வைத்தீர்! இல்லறம் இனிது கண்டீர்!
ஈகைகள் பல செய்தீர்! உத்தம குணம் கொண்டீர்
ஊரார் பிணி தீர்த்தீர்! எங்களைத் தவிக்கவிட்டு
ஏன் இந்தப் பிரிவு தந்தீர்?
ஐயாவே! எமது நெஞ்சம் ஆறாது தவிக்கின்றது!
ஒன்றுமே அறியாது உம் நினைவால்
வாடுகின்றோம். ஓயாது கலங்கும் எமக்கு
ஔடதம் போல் இருந்து ஆ:து போல்
எம்மைக் காத்துவந்த உமது நினைவுகளை மறக்கவே முடியாது.

*உங்கள் ஆத்மா சா[illegible]தியடைய நல்லூரான் திருவடியை வேண்டுகின்றோம்.*

11.01.2004 இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் நேரில்கலந்தும் மற்றும் பலவழிகளிலும் எமக்கு ஆறுதல்தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (10.02.2004) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அமரர் முத்தையா நடராசா**

(செல்லக்கண்டு)

(நல்லூர் - பஜனைப் பாடகர்)

தோற்றம் 13 01 1933

மறைவு 11 01 2004

50, மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(28247)(24-34-16-19)

# அளவுக்கு அதிக கிருமிநாசனிப் பாவனை கோவா விளைச்சலின் தரத்தைப் பாதிக்கும்

## கமமும் புலமும்

**நிறைமுனைவன்**

கோவா பொதுவாக மலைப்பிரதேசத்துக்கு உகந்த மரக்கறி இனம். போதிய ஈரலிப்பும், செழிப்புமுள்ள நிலத்தில் கோவா அமோகமாக விளையும்.

எனினும், வரண்ட பிரதேசங்களிலும் கோவாவை நீர்ப்பாசன முறையைப் பயன்படுத்தி செய்கை பண்ண முடியும்.

யாழ்ப்பாண மாவட்டம், வன்னி மாவட்டம், வவுனியா மாவட்டம் போன்ற இடங்களில் வரட்சி நிலை இருப்பினும் நீர்ப்பாசனம் செய்து கோவாப் பயிரை நன்கு விளைவித்து வருகின்றனர்.

கோவாவில் ஏ.எஸ், என்.எஸ், எஸ்.டி இனம் போன்றவை ஈரலிப்பு பிரதேசங்களுக்குரியவை. ஏ.எஸ். குறொஸ், கே.வை.குறொஸ் சி.எம். குறொஸ் போன்ற வர்க்கங்கள் வரண்ட பிரதேசங்களில் நீர்பாசனமூலம் பயிரிடக்கூடியவை.

### செய்கைமுறை

கோவாப்பயிருக்கு மேடைகள் அமைத்து விதைகளை விதைத்து வளர்த்தபின் தோட்டங்களில் அவற்றைப்பிடுங்கி ஒழுங்காக நடுவதனால் அதிக பலனைப் பெறலாம். கோவாப் பயிரின் வேர்கள் மண்ணின் மேற்பரப்பிலேயே படர்கின்றன. எனவே, நிலத்தை ஆழமாக உழத்தேவையில்லை. நிலத்தில் வளரும் புல், பூண்டு முதலியவற்றை அழிப்பதற்கேற்ற ஆழத்தில் நிலத்தை உழுதால் போதுமானது. பசுந்தாள் பசளை, கூட்டெரு அல்லது பச்சை எரு என்பவற்றை கோவாப் பயிருக்குப் பசளையாக இடலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்திலே பெரும்பாலும் ஆவணி, புரட்டாதி மாதங்களில கோவா நடுகை செய்யப்படுகின்றது.

வலிகாமம் பகுதியில் புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான், சுன்னாகம் மற்றும் வடமராட்சி போன்ற இடங்களில் கோவா அதிகமாகச் செய்கை பண்ணப்படுகின்றது.

மேடை போட்டு 20 தொடக்கம் 30 நாள்களுக்கிடையில் கன்றுகளைப் பிடுங்கி நடலாம். 20 ஆம் நாள் பருவத்தில் கிளைகள் உண்டாகும் தன்மை ஏற்படும். எமது பிரதேச பேச்சுவழக்கில் இதனை 'சடைகட்டல்' எனக் கூறுவார்கள்.

கிளைகள் உண்டாகும் வேளையில் அவற்றை உடனுக்குடன் கிள்ளி எறிந்துவிடல் வேண்டும். இல்லாதுவிடின் கோவா பயிரில் இருந்து பெரிய முட்டைகளை அறுவடை செய்யமுடியாது போய்விடும். கோவா பயிர் செய்கை பண்ணி 75 நாள் தொடக்கம் 100 நாள்வரை நல்ல அறுவடையைப் பெறலாம்.

### நோய்களும் கட்டுப்படுத்தலும்

எறும்பு, இலை அரிபுளு, அளுக்கணவன், மைற்ஸ் பூச்சி என்பவற்றின் தாக்கங்களாலும், கருந்தடி நோய், அழுகல் நோய் என்வற்றின் தாக்கத்தாலும் கோவாப்பயிர் பாதிக்கப்படுகின்றது.

இந்நோய்த் தாக்கங்களுக்கு உரிய கிருமிநாசனிகளை அளவோடு பயன்படுத்தி நோய்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளலாம்.

கோவா பயிர்களை நடுகைசெய்த மறுநாளே 'பைறமிக்ஸ்' என்ற கிருமிநாசனியைப் பயன்படுத்தி எறும்பு அரித்தலில் இருந்து பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

பயிர் வளர்ந்த பின்னர் இலை அரிபுளுக்கள் தாக்குகின்றன. இவற்றுக்கு 'அற்றபிறவுண்' கிருமிநாசனியைப் பயன்படுத்தலாம்.

அளுக்கணவன் தாக்கத்தினால் கோவாப் பயிரின் அடிஇலைகள் பழுத்துவிடும் எனவே, இதற்கு 'டைமித தியேற்' என்ற கிருமிநாசனியை உபயோகித்துக் கட்டுப்படுத்தலாம்.

சிறு - கண்ணுக்கு தெரியாத - பூச்சிகள் (மைற்ஸ் பூச்சி) பயிரின் குருத்து இலைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இவற்றுக்கு 'செலிக்குறோன்' கிருமிநாசனியைப் பயன்படுத்தலாம்.

கோவா பயிரிட்டு 45நாள்களில் கோவா முட்டைகட்டும். முட்டைகட்டத் தொடங்கிய ஒரு வாரத்தினுள் முட்டைகள் அழுகி கறுப்பு நிறத் தோற்றத்தைப் பெறுகின்றன. இதனை கருநதடிநோய் எனக் கூறுவர். இதற்கு 'கப்ரான்' என்ற கிருமிநாசினியைப் பயன்படுத்தலாம்.

கோவா பயிரிட்டு 65 நாள்களின் பிற்பகுதிகளில் - அழுகல் நோய் ஏற்படுகின்றது. இதன் தாக்கமே இன்று விவசாயிகளைப் பெரிதும் நட்டமடைய வைக்கின்றது.

இந்நோய் ஏற்பட்டவுடன் முட்டைகள் அரித்து, முழுவதும் அழுகிப் போய் விடுகின்றன. இது ஒருவகை பங்கஸ் நோய் ஆகும். 'டக்கோனிப்' என்ற கிருமிநாசயைப் பயன்டுத்தி இதனைக் கட்டுப்படுத்தலாம்.

### விவசாயிகளின் ஆசைகளும் அசண்டைகளும்.

கோவாப்பயிரில் இருந்து லாபம் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் பல செய்கையாளர்கள் அளவுக்கு அதிகமான உரம் மற்றும் கிருமிநாசனிகளைப் பயன்படுத்தி வருகின்றார்கள. கிருமிநாசனிகள் பயன்படுத்தி குறிப்பிட்ட ஒரு காலத்தின் பின்னரே அவற்றை அறுவடைசெய்து சந்தைப் படுத்தவேண்டும். விசிறப்படும் கிருமிநாசனிகள் கோவா முட்டையினுள் சென்று விடுவதால் அதன் தாக்கம் விரைவில் குறைந்துவிடாது கிருமிநாசனியைப் பயன்படுத்தி ஓரிரு நாள்களில் சந்தைக்கு அவற்றை கொண்டு வருவதால் முட்டைகளில் இருந்து கிருமிநாசனியின் நாற்றம் வெளிவருவதைப் பாவனையாளர்கள உணர்ந்து வருகின்றனர். கிருமிநாசனியை உள்வாங்கிய இப்பயிரை உட்கொள்வதால் மக்களுக்கு பல்வேறு விதமான நோய்கள் ஏற்படுவதாக வைத்தியர்கள் கூறுகின்றார்கள்.

உரப்பாவனை, கிருமிநாசனிப் பாவனை என்பற்றில் விவசாயிகள் அக்கறைகொண்டு உரிய முறைப்படி சந்தைப்படுத்தாவிட்டால் நஞ்சு ஊறிய மரக்கறிகளை மக்கள் வாங்காது விட்டுவிட நேரிடும். நஞ்சு ஊறாத மரக்கறிகள் விலை அதிகமாக இருப்பினும், மக்கள் அதிகமாக அவற்றையே விரும்பி வாங்குவர், சாதாரணமாக இன்று எல்லோரும் ஓரளவு நிதி நிலையில் உயர்ந்தவர்களாக இருப்பதால், அதிக அளவு ஆசை கொண்ட விவசாயிகளுக்கும், மருந்தடிப்பவர்களுக்கும் நல்ல எதிர்காலம் இல்லை என்றே கூறலாம்.

பொதுவாக நிலம் ஈரலிப்பாக இருப்பின் பங்கஸ் அதிகமாக இருக்கும். அநேகமாகப் பனிகாலத்தில் இது அதிகமாக இருக்கும். தோட்டச் செய்கையாளர்கள் தமது தோட்டங்களை துப்புரவாக வைத்திருக்கவேண்டும். பயிர்களுக்கு மருந்து அடிப்பதை விட பழுதடைந்த - பாதிப்படைந்த பயிர்களை, இலைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்துவது கூடிய பலனைத் தரும். அழுகல்களைத் தூர இடங்களில் கொண்டு சென்று எரித்து விடவேண்டும். வரம்புகளில் அவற்றை வீசுவதால் பக்கத்துத் தோட்ட நிலத்திலும் தாக்கம் ஏற்படும். தோட்டங்களை - நிலங்களை - புழுக்கள், களைகள் இல்லாமல் வைத்திருப்பதோடு அயல் தோட்ட நிலங்களையும் அவ்வாறே வைத்திருக்க வேண்டும்.

விவசாயிகள் அசட்டை செய்யாது இவற்றைக் கடைப்பிடித்தால் கோவா போன்ற பயிர்களில் இருந்து நிச்சயமாக பெருவிளைவையும் இலாபத்தையும் பெறமுடியும். ✳

---

# மாணவர் ஆங்கிலத்தைக் கற்க ஆசிரியர் வழிகாட்டிகளாக வேண்டும்

## ஆசிரியர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.10

மாணவர் ஆங்கிலம் கற்பதில் ஆசிரியர்கள் வழிகாட்டிகளாக - முன்மாதிரியாக இருக்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் வலயக் கல்விப்பணிப் பாளர் திருமதி றெஜினா இருதய நாதன்.

சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் க.தர்மசோதி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய அரசு ஆசிரியர்களை உயர்ந்த இடத்தில் வைத்து மதிப்பளித்துள்ளது. அத்துடன், ஆசிரியர்களைக் கௌரவம் செய்யும் விதத்தில் உயர்ந்த வேதனத்தில் பணிபுரிய அரசு பணித்துள்ளது.

ஆசிரியர்கள் இத்தகைய மகத்தான பணியை நிறைவேற்ற அர்ப்பண சிந்தனையுடன் முன்வரவேண்டும்.

இனிவரும் காலங்களில் ஆசிரியர்கள் மட்டுமின்றி மாணவர் களும் ஆங்கிலக் கல்வியை முழுமையாகக் கற்க கவனம் செலுத்துதல் வேண்டும்.

கணனியுகம் போன்று ஆங்கிலப் புரட்சியும் இங்கு ஏற்பட வேண்டும்.

எனவே, அதற்கேற்ற வகை யில் ஆசிரியர்கள் முதலில் ஆங்கிலக்கல்வியில் ஆர்வம் செலுத்த வேண்டும் - என்றார்.

சுதுமலை அம்மன் ஆலயத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ சு.சர்வேஸ்வர சர்மா ஆசியுரையை நிகழ்த்தினார்.

பாடசாலை அதிபர் த.தர்மசோதி 2001, 2002, 2003ஆம் ஆண்டுக்கான நீண்ட அறிக்கையை வாசித்தளித்தார்.

தொடர்ந்து சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கம் சிறப்புவிருந்தினராகக் க்லந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

பரிசில்களையும், சான்றிதழ்களையும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் வழங்கிக் கௌரவித்தார். (எ-185)



வடமராட்சி லயன்ஸ் கழகம் வியாபாரிமூலைப் பகுதியில் நடத்திய இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் முகாமில் ஒருவருக்கு வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ்.கதிரைமலை மூக்குக்கண்ணாடி அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வடமராட்சிச் செய்தியாளர்)*

# புலிகள் சயனைட் அணிந்துவர எந்தக் கட்டுப்பாடும் இல்லை

## வன்னிப் படைத்தளபதி தெரிவிப்பு

வவுனியா,பெப்.10

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சயனைட் அணிந்தவாறு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரலாம். அதில் எந்தவிதமான கட்டுப்பாடோ, தடைகளோ இல்லை.

- இவ்வாறு இராணுவத்தின் வன்னிக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூரிய தெரிவித்தார். வவுனியாவில் உள்ள கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நேற்று முன்தினம் படை அதிகாரிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில நடந்த சந்திப்பின் போதே அவர் இப்படிக்கூறினார்.

கடந்த 5ஆம் திகதி ஓமந்தைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் இரு உறுப்பினர்கள் சயனைட் குப்பியுடன் சென்றசமயம் கைதுசெய்யப் பட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த விவகாரம் குறித்து விடுதலைப் புலிகள் கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த தளபதி சிசிர விஜயசூரிய தனக்கும் இந்தச் சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை என்றும் - தனக்கு இது பற்றித் தெரியாது என்றும் - இவ்வாறு ஒரு சம்பவம் நடைபெற்றமைக்காக மனம் வருந்துவதாகவும் தெரிவித்தார். இனிமேல் இவ்வாறு எதுவும் இடம் பெறாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-3-164)

# சங்கிலியன் அரண்மனை, மந்திரிமனை வரலாற்றுச் சான்றுகளாகப் பிரகடனம்

யாழ்ப்பாணம்,பெப்.10

நல்லூர் சங்கிலியன் அரண்மனை வாயில், மந்திரிமனை என்பன தொல்பொருள் சின்னங்களாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த தொல்பொருள் திணைக்கள அகழ்வாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் கலாநிதி செனரத் திஸநாயக்க இத்தகவலைத் தெரிவித்தார்.

கலாநிதி செனரத் திஸநாயக்க, தமது திணைக்களத்தில் பணிபுரியும் 40 அதிகாரிகள் சகிதம் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

தொல்பொருள் சின்னங்கள் அமைந்துள்ள கந்தரோடை, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, நல்லூர் ஆகிய பகுதிகளுக்குச் சென்ற இக்குழுவினர் அவ்விடங்களிலுள்ள தொல்பொருள்கள் குறித்து விவரங்களைத் திரட்டினர்.

தமது விஜயம் குறித்து செனரத் திஸநாயக்க உதயனுக்குத் தெரிவித்ததாவது:-

கந்தரோடை, நெடுந்தீவு, யாழ். கோட்டை, நல்லூர் யமுனா ஏரி, ஊர்காவற்றுறை கோட்டை ஆகியன தொல்பொருள் சின்னங்களாக வர்த்தமானி மூலம் ஏற்கனவே பிரகடனம் செய்யப்பட்டுள்ளன. இந்த இடங்களில் தொல்பொருள்களைப் பாதுகாக்கும் விளம்பரப்பலகைகள் நடப்படவிருக்கின்றன. அந்தப் பகுதிகள் எமது திணைக்களத்தினால் பேணப்படவிருக்கின்றன.

நல்லூர் மந்திரிமனை, சங்கிலியன் அரண்மனை ஆகியவற்றை தொல்பொருள் சின்னங்களாக வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்யவிருக்கின்றோம்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அரும்பொருள் காட்சிச்சாலையைப் புனரமைக்கவிருக்கின்றோம். அத்துடன், அங்கு கலைக்கூடம், பங்களா ஆகியவற்றையும் புதிதாக அமைக்கவிருககின்றோம்.

இந்தப் பணிகளை மேற்கொள்ள எமது திணைக்களம் 11 லட்சம் ரூபாவை ஒதுக்கவுள்ளது. தொல்பொருள்கள் தொடர்பாகக் கண்காட்சி ஒன்றையும் அரச ஊழியர்களுக்கான செயலமர்வு ஒன்றையும் அடுத்தமாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நடத்த உத்தேசித்துள்ளோம். - என்றார் அவர். (ஜ-3)

# கெப்பிற்றிகொல்லாவையில் குண்டு வீச்சு!

அநுராதபுரம் மாவட்டம் கெப்பிற்றிக்கொல்லாவைப் பகுதியில் இயங்கிவந்த 'வேர்ல்ட் விஷன்' என்ற தொண்டர் நிறுவனத்தின் அலுவலகம்மீது நேற்றுமுன்தினம் காலை குண்டுவீச்சுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அலுவலகம் முற்றாகச் சேதமடைந்தது. எனினும், அச்சமயம் அங்கு யாருமிருக்காததால் ஆள்களுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்தச் சம்பவத்தின் பின்னர் - அதில் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் மூன்று பௌத்த பிக்குகள் இலக்கத்தகடு மாற்றப்பட்ட வான் ஒன்றில் பயணம் செய்துகொண்டிருந்த சமயம் ரம்பாவைப் பகுதியில வைத்து பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

# TOSHIBA COPIERS

## காரியாலய உபகரணங்கள் விற்பனை நிலையம்
## இப்போது யாழ்ப்பாணத்தில்




சர்வதேச தரம் மிக்க டொஷீபா கொப்பியர்கள் மற்றும் ஏனைய ஓ∴பீஸ் ஓட்டோமேசன் உற்பத்திகள் என்பன கட்டுபடியான விலையில் இப்போது உங்கள் சொந்த ஊரிலேயே...

- அனலோக் போட்டோ கொப்பி மெஷின்
- டிஜிடல் போட்டோ கொப்பி மெஷின்
- லெப்டொப் கொம்பியூட்டர்
- ∴பக்ஸ் மெஷின்கள்
- டெலிபோன் சிஸ்டம்

**விசேட சலுகை**
**31 மார்ச் 2004 வரை மட்டுமே**

ஜோன்கீல்ஸ் ஓ∴பீஸ் ஓட்டோமேசன் மற்றும் I.I.S. ஓ∴பீஸ் ஓட்டோமேசன் ஆகியன ஒன்றிணைந்து யாழ் மக்களுக்கு மிகச் சிறந்த சேவையை இப்போது வழங்குகின்றன.

TOSHIBA FROM JOHN KEELLS

விற்பனை முகவர்
I.I.S. ஓ∴பீஸ் ஓட்டோமேசன்,
360/3, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021-4-590190

மேலதிக தகவல்களுக்கு: அஷோக் 0777725241, விக்னேஷ் 0777271225, நௌஷான் 0722260197.

இலங்கை எங்கும் பரந்த சேவை செய்து வருகின்ற டொஷீபா வட இலங்கை மக்களின் வாழ்வோடும் ஒன்றிணைய இப்போது யாழ்ப்பாணத்தில்....

# இலங்கை அரசியலில் ஏற்படும் குழப்பங்கள் அபிவிருத்தியில் தேக்கத்தை ஏற்படுத்துகின்றன

## ஆசிய அபிவிருத்தி வங்கி வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

வடமராட்சி,பெப்.10

"இலங்கையின் அரசியலில் ஏற்படும் குழப்பங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் தேக்கநிலையினை ஏற்படுத்துகின்றன. சமாதான நடவடிக்கையின் முன்னேற்றத்தைப் பொறுத்தே அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வதிவிடப் பிரதிநிதி ஜோன் கூனி இவ்வாறு தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்கு, வடமராட்சி வடக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 18 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3 கோடி ரூபாவைக் கையளித்த வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மருதங்கேணியில் கடந்த சனிக்கிழமை வடமராட்சி கிழக்குப் புனரமைப்புக் குழுத்தலைவர் எஸ்.பொனனம்பலம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது. மீனவர்கள் கடற்றொழில் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு வசதியாக சுழற்சி முறையில் கடன்களை வழங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 3 கோடி ரூபாவைக் கடனாக வழங்கியுள்ளது.

இவ்வைபவத்தில் பொதுச் சுடரினை ஜோன் கூனியும் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ நிர்வாகசேவை யாழ். மாவட்டப் பொறுப்பாளர் விஜிதரனும் ஏற்றிவைத்தனர்.

ஜோன் கூனி இந்த வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

இலங்கை ஒரு அழகான நாடு. ஆனால், தற்போது யுத்தத்தினால் இடிந்த கட்டடங்களையே பார்க்க முடிகின்றது. விரைவில் இங்கு புதிய பூமியை நாம் அனைவரும் பார்க்க வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கும் முக்கிய தொழிலாக மீன்பிடித்துறை விளங்குகின்றது. எனவேதான், அதனை அபிவிருத்தி செய்ய இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி 1960 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வருகின்றது. இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை அபிவிருத்தி செய்ய 2000ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிய அபிவிருத்தி வங்கி பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஜேர்மனி, இந்தியா, ஒபேக நிறுவனம் போன்றவற்றின் உதவியுடன் இந்நிறுவனம் இயங்கிவருகின்றது.

வடக்கு - கிழக்கில் 'நிகொட்' திட்டத்தின் மூலம் பல அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன், ஏ-9 வீதி புனரமைப்பு, மின்சார விநியோகம், கால்நடை வளர்ப்பு போன்றவற்றிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியினை வழங்கியுள்ளது. எமது நிறுவனத்தின் அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு அரசும் - புலிகளும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

இலங்கையின் அரசியலில் ஏற்படும் குழப்பங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் தேக்க நிலையினை ஏற்படுத்துகின்றன. சமாதான நடவடிக்கையின் முன்னேற்றத்தைப் பொறுத்தே எதிர்காலத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என நாம் எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

நெதர்லாந்து தூதராலயத்தின் செயலாளர் ஜான் ஹஸ்கன் இவ்வைபவத்தில் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை நேரில்வந்து பார்க்கும்போதே பல உண்மைகள் தெரிகின்றன. கொழும்பில் இருந்து ஊகிப்பதைவிட நேரில்வந்து பார்வையிடுவதே பொருத்தமானதாகத் தெரிகின்றது.

இலங்கைக்கும், நெதர்லாந்துக்கும் 200 வருடகால நீண்ட தொடர்புகள் உள்ளன. யாழ். கோட்டை, யாழ்ப்பாணத்தில் உள்ள பழைய வீடுகளின் அமைப்பு போன்ற விடயங்கள் எமது நாட்டுக்கும் இலங்கைக்கும் இருந்த தொடர்பினை ஞாபகமூட்டுகின்றன. இவற்றில் சில விடயங்கள் நல்லவையாகவும் இருக்கலாம். சில விடயங்கள தேவையற்றவையாகவும் இருக்கலாம்.

மீனவ சமுதாயத்திற்கும் எமக்கும தொடர்பு உண்டு. எமது நாட்டிலும் கடல் உள்ளது. ஆனால், அக்கடலில் மீன்வளம் வற்றிவிட்டது. அந்த நிலை இங்கு ஏற்படாது பார்க்கவேண்டும். றோலர் மூலம் நீண்ட காலத்துக்கு மீனைப்பிடிக்கக்கூடிய வாய்ப்பு உருவாகவேண்டும். மீனவர் சங்கங்கள அமைத்து தமது உரிமைகளைப் பெறவேண்டும்.

வடக்கு - கிழக்கில் பல திட்டங்களை முழு இலங்கைக்கும் நடைமுறைப்படுத்த புலிகள் மூலமும் வேறு நிறுவனங்கள் மூலமும் திட்டமுன்மொழிவுகளைப் பெற்றுள்ளோம். கடன் வழங்கும் நாடுகளைச் சேர்ந்தவர்களும் புலிகளும் மக்களுக்கு உதவ பாடுபடுகின்றனர்.

மக்களும், குறிப்பாக மீனவ சமுதாயத்தினரும் சமாதானம் நிலைபெற உழைக்க வேண்டும். அவர்கள் தமது வாழ்க்கை நிலைமையை உயர்த்த இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.

தற்போதைய அமைதிச் சூழலில் நிதி உதவிகளை எவ்வாறு பெறுவது என்பதனை தீர்மானிக்க வேண்டும். மேசையில் பேசித்தீர்வு வரும் வரை மனிதாபிமான உதவிகளுக்கு காத்திருக்க முடியாது - என்றார். (ம-182)

### மிதிவெடி விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யுத்தம் நடைபெற்ற வவுனியா வடக்கு, கிளிநொச்சி, முல்லைத்தீவு. வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களில் மீளக் குடியேறியோருக்கான மிதிவெடி விழிப்புக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுவருகின்றன. வெண்புறா நிறுவனமும், மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவும் இணைந்து இக்கருத்தரங்குகளை நடத்திவருகின்றன.

மீளக்குடியேறிய பகுதிகளில் உள்ள காணிகளில் இருந்து மிதிவெடிகளை முற்றுமுழுதாக அப்புறப்படுத்த போதிய ஒத்துழைப்பை வழங்குவதற்காக மிதிவெடி விழிப்புக் கருத்தரங்குகளில் தவறாது கலந்து கொள்ளுமாறு வெண்புறா நிறுவனம் மீளக்குடியேறிய மக்களை வேண்டியுள்ளது. (ம-118)

### சாவகச்சேரி நகரசபையில் ஆதனவரி செலுத்தும் எல்லை நீடிப்பு

தென்மராட்சி,பெப்.10

சாவகச்சேரி நகரசபையில் இவ்வருடத்திற்குரிய ஆதனவரி செலுத்துவதற்கான கால எல்லை பெப்ரவரி 16ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக காலத்தில் கொடுப்பனவில் கழிவு வழங்கப்படும்.

இந்த ஆதனவரி ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இக்கால எல்லைக்குள் அதனை செலுத்த முடியாதவர்களின் நலன் கருதி எதிர்வரும்16 ஆம்திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக நகரசபை செயலாளர் மு.செ. சரவணபவ அறிவித்துள்ளார்.




வடமராட்சி கிழக்கில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இந்து கலாசார அமைச்சினால் அண்மையில் உடுபுடைவைகள் வழங்கப்பட்ட நிகழ்வில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை பெண்மணி ஒருவருக்கு உடுபுடைவை வழங்குவதைப் படத்தில் காணலாம். கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.சீவரத்தினம், சமூக சேவை உத்தியோகத்தர் தி.கிருபாகரன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

*(படம் : செம்பியன்பற்று செய்தியாளர்)*

# பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ஜப்பானின் அம்டா அமைப்பு திட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.10

யுத்தத்தால் நலிவடைந்துள்ள கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு ஆசிய வைத்திய சங்கம் (அம்டா) யாழ் மாவட்டத்தில் இவ்வருடம் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளது என்று சங்கத்தின் யாழ். மாவட்ட திட்ட இணைப்பாளர் கிறோயுக்கி ஒக்காசாக்கி.

யாழ்.மாவட்டத்தில் செயற்பட்டு வரும் ஆசிய வைத்திய சங்கத்தின் பணிகள் தொடர்பாக கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

ஜப்பானைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இந்தச் சங்கம் அந்த நாட்டு மக்களது நிதியுதவியுடனேயே இயங்கிவருகின்றது. போரினால் நலிவடைந்துள்ள அடிமட்ட கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் சுகாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதிலும் இந்தச் சங்கம் கூடிய கவனம செலுத்துகின்றது.

இதன் அடிப்படையிலேயே வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கும் தனது சேவையை அது விஸ்தரித்துள்ளது. சுகாதார நடவடிக்கையை மேம்படுத்தும் வகையில் கிளிநொச்சியில் நடமாடும் வைத்திய சேவையை சங்கம நடத்தி வருகிறது என்றும் -

யாழ். மாவட்டத்தில் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் அது ஈடுபட்டு வருகின்றது என்றும் ஒக்காசாக்கி தெரிவித்தார்.

யுத்த நடவடிக்கைகளால் சிதைவடைந்துள்ள தென்மராட்சிப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு பகுதிகளில் சுமார் 30 லட்சம் ரூபா நிதியில் பல்வேறு அபிவிருத்தித் திடடங்களை சங்கம் கடந்த ஆண்டு மேற கொண்டுள்ளது.

இதன் ஓர் அங்கமாக மட்டுவில் வடக்கில் யுத்தத்தால் சேதமடைந்த ஸ்ரீவேற்பிள்ளை சனசமூக நிலையத்தை 10 லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்ததுடன், அதன் பாவனைக்கென சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நிலையத்திற்கு வேண்டிய தளபாடங்கள், தொலைக்காட்சி போன்ற பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் உள்ள விவசாயிகளின் வாழ்கைத்தரத்தை உயர்த்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட 15 விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன என்றும் - அவர் கூறினார்.

"கைதடி, நாவற்குழி தெற்கில் சுமார் 10 லட்சம் ரூபா செலவில் புதிய சனசமூக நிலையம் ஒன்றினை நிர்மானித்துக் கொடுத்துள்ளோம். அது மட்டுமல்லாது, இப்பிரதேசத்தைச் சேர்ந்த 20 மீனவக் குடும்பங்களிற்கு சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான வலை உட்பட மீன்பிடி உபகரணங்கள வழங்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் உள்ள மக்கள் சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு ஏற்றவகையில் தலை முடி அலங்காரம், கேக் ஐசிங் போன்ற பயிற்சி வகுப்புக்களும் நடத்தப்படுகின்றன. தென்னைப் பயிர்செய்கையை ஊக்குவித்தல் மற்றும் கால்நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்தல் போன்ற கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன என்கிறார் ஒக்காசாக்கி.

இந்தவகையில் இவ்வருடம் வேறு இரு கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டு பல புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன - என்றும் அவர் சொன்னார். (ம-5)

# போக்கறுப்பு அ.த.க.பாடசாலையை மீண்டும் திறக்குமாறு கோரிக்கை

பருத்தித்துறை,பெப்.10

வடமராட்சி கிழக்கிலுள்ள போக்கறுப்பு அ.த.க. பாடசாலையை மீண்டும் திறக்குமாறு அப்பகுதியில் மீளக் குடியேறிய மக்கள் மருதங்கேணி உதவி அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இப்பகுதி மாணவர்கள் கேவில் அ.த.க. பாடசாலையில் கல்வி கற்கின்றார்கள்.

போக்கறுப்பு அ.த.க. பாடசாலையின் கட்டடம் முற்றாகச் சேதமடைந்துள்ளது. இதனால் இப்பகுதிப் பாடசாலையை உடன் திறக்க முடியவில்லை. இருப்பினும், கேவில் அ.த.க. பாடசாலையில் தனியாக போக்கறுப்பு அ.த.க.பாடசாலையை இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக உதவி அரசாங்க அதிபர் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது. (ம-118)




பண்டத்தரிப்புக் கிராம அலுவலராக 14 வருட காலமாகப் பணியாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்ற இ.துரைராசாவுக்கு பண்டத்தரிப்பு மக்கள் சார்பில் அண்மையில் நடத்தப்பட்ட சேவை நலன் பாராட்டு விழாவில் அவருக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். விழாவுக்குத் தலைமை வகித்த விவசாயிகள் சம்மேளனத் தலைவர் ச.செல்வரத்தினம், புதிய கிராம அலுவலர் எஸ்.ஞானானந்தன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம் : சண்டிலிப்பாய் செய்தியாளர்)

# பாதுகாப்பை நோக்காகக் கொண்டே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது

## டி.எம்.ஜயரத்ன கூறுகிறார்

ஜனாதிபதி, நாடாளுமன்றத்தைக கலைத்தபோது நாட்டின் பாதுகாப்பையும் ஐக்கியத்தையும் நோக்காகக் கொண்டிருந்தார் என்று தபால், தொடர்பாடல் அமைச்சர் டி.எம்.ஜயரதன தெரிவித்தார்.

ஆகையால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாட்டைப் பாதுகாப்பதா அல்லது துண்டாடுவதற்கு இடமளிப்பதா என்பதை கவனத்தில் எடுத்துக்கொண்டு மக்கள் தெளிவான தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

கேகாலை ஆயுர்வேத ஆஸ்பத்திரியில் இரண்டுமாடிக் கட்டடத்தை திறந்து வைத்து அமைச்சர் உரையாற்றினார்.

ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கும் போது, மக்கள் நாட்டின் ஒருமைப்பாட்டை மனதில் கொள்ள வேண்டும் என்று அமைச்சர் ஜயரத்ன மேலும் கேட்டுக்கொண்டார். (ம-8-9)

# புதிய தேர்தல் விஞ்ஞாபனம் எதையும் ஐ.தே.முன்னணி வெளியிடமாட்டாது

கொழும்பு,பெப்.10

எதிர்வரும் பொதுத் தேர்தலை ஒட்டி ஐக்கிய தேசிய முன்னணி புதிதாக தேர்தல் விஞ்ஞாபனம் எதையும் வெளியிடாது. 2001 ஆம் ஆண்டு முன்வைத்த வாக்குறுதிகளை மக்கள் அங்கீகரித்துள்ளனர். எனவே, மக்கள் அங்கீகாரம்பெற்ற எமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையிலேயே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஐ.தே.முன்னணி செயற்படும்.

காணி அமைச்சர் ராஜிதசேனாரத்ன இத்தகவலை வெளியிட்டார்.

தேர்தல் குறித்து ஆராயுமுகமாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூடி ஆராய்கிறது. அதைத் தொடர்ந்து தோழமைக் கட்சிகளுடன பிரதமர் பேச்சு நடத்திப் பொதுவான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இக்கூட்டத்தில் வேட்பாளர்களைத தெரிவு செய்வதற்கான தெரிவுக்குழு ஒன்றும் நியமிக்கப்படும். மேலும் நாடளாவிய ரீதியில் தோழமைக் கட்சிகளுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் பரிசீலனை செய்யப்படும்.

அரசின் பக்கமே மக்கள் நிற்கின்றனர். எனவே, ஏப்ரல் 3ஆம் திகதி நாமே மீண்டும் ஆட்சி அமைத்து ஜனாதிபதிக்கு ஒரு நல்ல பாடத்தைப் புகட்டுவோம் - இவ்வாறு அமைச்சர் ராஜிதசேனாரத்ன தகவல் வெளியிட்டார்.

## பணியாள் தேவை

நித்திய, உற்சவகால, வேலைகளுக்கு நிரந்தரமாகப் பணியாற்ற ஆள்தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். சனி, ஞாயிறு கிழமைகளில் மாலை 4.00மணிக்கு தேவஸ்தானத்திற்கு சமுகமளிக்கவும்.

கன்னாதிட்டி காளிஅம்பாள்
தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம்.

(28294)(38-35-26-32)


## இலங்கை மின்சாரசபை - யாழ். பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்தின் முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம்.

| திகதி, நேரம் | இடங்கள் |
|---|---|
| 14.02.2004 காலை 9.00 - பி.ப.5.00 | உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ்.மாநகரசபைப் பகுதி |
| 21.02.2004 காலை 9.00 - பி.ப.5.00 | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென் மராட்சிப் பிரதேசம். |
| 28.02.2004 காலை 9.00 - பி.ப.5.00 | இணுவில், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணப் பட்டணம், ஆனைக்கோட்டை, நவாலி, மருதனார்மடம், மானிப்பாய், உடுவில், சங்குவேலி. |
| 06.03.2004 காலை 9.00 - பி.ப.5.00 | புன்னாலைக்கட்டுவன், அச்செழு, அச்சுவேலி, வடமராட்சி. |
| 13.03.2004 காலை 9.00 - பி.ப 5.00 | வட்டுக்கோட்டைப்பகுதி, பண்டத்தரிப்பு, மூளாய், இளவாலை, சங்கானை, சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி, ஏழாலை. |
| 20.03.2004 காலை 9.00 - பி.ப 5.00 | குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி. |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின்பொறியியலாளர்.
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
இலங்கை மின்சாரசபை.

(சி-33197) (32-35-26)

# பட்டதாரிகள் வேலையின்றித் தவிப்பதை விட்டு சுயதொழில் முயற்சியில் ஈடுபட வேண்டும்

## ஐ.ஐ.எஸ். நிறுவன இயக்குநர் விக்னேஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.10

பட்டதாரிகள் வேலை வாய்ப்பின்றி தவிபபதனைவிட சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு ஏனையவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க முன்வர வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். ஐ.ஐ.எஸ். கணனி நிறுவன இயக்குநர் கே.விக்னேஸ்.

யாழ். ஐ.ஐ.எஸ். கணனி நிறுவனத்தின் 8ஆவது நிறுவன தினமும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த 5ஆம் திகதி யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் யூபிலி மண்டபத்தில் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைக் கல்வியை முடித்து வெளியேறும் மாணவர்கள் உயர் கல்வியை மேற்கொள்ளல், நல்லதொரு வேலைவாய்ப்பைக் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்தல் என்ற மூன்று நிலைமைகள் பற்றிச் சிந்திக்கின்றார்கள்.

இம்மூன்றையும் இலகுவாகவும், கௌரவத்துடனும் அங்கீகாரத்துடனும் பெறுவதற்கான இலகுவான வழியை எமது நிறுவனம் மேற்கொண்டுவருகிறது.

எமது நிறுவனம் மாணவர்களுக்கு மிகவும் தேவையான கற்கைகளை நடைமுறைச் சாத்தியங்களுக்கு ஏற்ற வகையில் போதித்து வருகின்றது. இது எமக்கு திருப்தியைத் தருவதோடு சமுதாயத்துக்கும் பயனுள்ளதாகக் காணப்படுகிறது. இதனால் தான் நாம் உயர்வான நிலையை அடைய முடிகிறது.

யாழ். குடாநாடு நீண்டகால கல்விப் பாரம்பரியத்தையுடைய மண். அத்துடன், ஏனைய மாவட்டங்களை விட பொருளாதார ரீதியிலும் முன்னேற்றம் கண்ட பகுதியாகும். இவற்றைக் கொண்டு எமது தகவல் தொழில்நுட்பப் புலமையை சர்வதேச தரத்துக்கு உயர்த்த அனைவரும் பாடுபட வேண்டும்.

இதற்கேற்ற வகையில் எமது நிறுவனம் ஒவ்வொரு வருடமும் ஆக்க பூர்வமான பல திட்டங்களை முன்னெடுத்து அவற்றைச் சிறந்த வகையில் செயற்படுத்தி வருகிறது.

இந்த வருடம் மேலும் பல புதிய கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அந்த வகையில் இம்மாத இறுதிப் பகுதியில் பிரிட்டன் அரசின் அங்கீகாரத்துடன் தகவல் தொழில்சார் நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இன்று சான்றிதழ்களைப் பெற்று வெளியேறுவோர் வேலைவாய்ப்பைத தேடி அலையக்கூடாது. படித்து பட்டம் பெற்று வெளியேறிய பெரும் பாலானோர் வேலை வாய்ப்பின்றி சோம பேறிகளாகத் திரிகின்றார்கள். இந்த நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

நாம் சுயமாகச் சொந்தத் தொழில் ஆரம்பித்து செயற்பட வேண்டும். அப்பொழுதுதான் நாம் உயர்நிலைக்கு வருவதோடு மற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க முடியும - என்றார். (ம-8-5)

## படிவங்களை அனுப்பி வைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.10

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் யாழ். வலய அமைப்பினால் அதன் செயற்பாடுகள் குறித்து ஆராய வடமராட்சி தெற்கு, மேற்கு பிரிவுகளிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்பட்ட படிவங்களைப் பூர்த்தி செய்து விரைவில் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சனசமூக நிலையங்களின் நிர்வாகக் குழுக் கூட்டத்தின் அறிக்கையையும் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-8-173)


## மரண அறிவித்தல்

### மங்களராஜன் யாதவன்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியாவில் வசித்தவரும் தற்போது இல.54, பிறேசர் அவென்யுவில் வசித்தவரும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவருமாகிய மங்களராஜன் யாதவன் 08.02.2004 அன்று அகாலமரணமடைந்தார்.

அன்னார் மங்களராஜன் (முன்னாள் தொழில்நுட்ப அலுவலர், மாவட்ட அலுவலகம் - மன்னார்) - அருந்ததி தம்பதியின் சிரேஷ்ட புத்திரரும் கேஷிகா (சனச அபிவிருத்தி வங்கி - வவுனியா), இமயவன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மார்க்கண்டு (முன்னாள் கிராம சபைத தலைவர் - மானிப்பாய்) - சபாபதி தம்பதிகளின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 09.02.2004 அன்று கல்கிசை மலர்ச்சாலையில் பிற்பகல் 3.00 மணி தொடக்கம் இரவு 9.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் வவுனியா, மன்னார் வீதி, வேப்பங்குளம் இல்லத்தில் இன்று (10.02.2004) செவ்வாய்க்கிழமை வைக்கப்பட்டு, பிற்பகல் 3 மணிக்கு தச்சநாதன் குளம் மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்:
ம.மங்களராஜன்
(தந்தை).

*வேப்பங்குளம், வவுனியா.*
*தொலைபேசி: 024 222 3293*
(சி-33198)
(24-26-35-32)





# புலமைப் பரிசில் பெறுபேறுகள்

# குடாநாட்டில் வீழ்ச்சி அடைகிறதா?

அவர்கள் வெறும் 10 வயதுடைய சிறுவர்கள். அந்த வயது அவர்களுக்கு சோதனையும் வேதனையும் கலந்த வயதாககூட இருக்கலாம்.

அதிகாலை நித்திரையிலிருந்து எழுப்பப்படுவார்கள். அரைத் தூக்கத்தில் வீட்டில் அவர்களுக்கு பாடம் நடத்தப்படும்.

காலை ஆறு மணிக்கு ரியூட்டறிக்கு ஓடவேண்டும். 8 மணிக்கு பாடசாலை.

பாடசாலை முடிந்ததும் அங்கேயே விசேட வகுப்பு.

அது முடிந்து வீடு வந்ததும் மீண்டும் ரியூட்டறிக்கு துரத்தப்படுவார்கள். அங்கிருந்து வந்ததும் இரவிரவாக வீட்டில் வகுப்பு.

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்காக 10 வயதுப பிள்ளை ஒன்று தயார்ப்படுத்தப்படுகின்ற - வாட்டி எடுக்கப்படுகின்ற முறைகள் தான் இவை.

தமிழ், ஆங்கிலம், சிங்களம், கணிதம், பொது அறிவு.. இன்னும ஏராளம். பிஞ்சுத் தலைகளுக்குள் இவற்றையெல்லாம் இடித்து இடித்து நுழைத்துவிடுவதில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒரு பெரும் ஜீவ மரணப் போராட்டமே நடத்தி முடித்து விடுகின்றார்கள்.

பிரபல பாடசாலை ஒன்றில் அனுமதி பெற்றுக்கொள்வதே இந்தப் பாட்சையில் பெற்றோர்கள் தலைகீழாய் நிற்பதற்குரிய பிரதான காரணமாக இருக்கின்றது.

பிள்ளைகளைவிடப் பெற்றோர்களுக்கே இது ஒரு சோதனைக் காலம் என்று கூறலாம். பல பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் புலமைப் பரிசில் பரீட்சையினை ஒரு கௌரவப்பிரச்சினையாகக் கருதுகின்றார்கள். அதாவது, அயல்வீட்டுப்பிள்ளை சித்தியடைந்து தனது பிள்ளை சித்தியடையத் தவறிவிட்டால் தனது கௌரவம் பாதிக்கப்பட்டுவிடும் என்று பல பெற்றோர்கள் கருதுகின்றார்கள்.

அதனால்தான் அவர்கள் தமது பிள்ளைகளின் தலையில் சுமைகளை அடுக்கிவிட்டு அவர்களைப் பாடாதபாடுபடுத்திவிடுகின்றார்கள்.

இப்பரீட்சை மாணவர்களை உளவியல் ரீதியில் பாதித்துவிடக்கூடியது என்று உளவியல் நிபுணர்கள் பலர் கருத்து வெளியிட்டிருக்கின்றார்கள். கடந்த வருட புலமைப் பரிசில் பரீட்சையின் முடிவுகள் வெளியாகியிருக்கின்றன. கொழும்பில் முடிவுகள் வெளியானவுடனேயே இங்குள்ள பல பெற்றோர்கள் 'இன்ரநெற்' மூலம் தமது பிள்ளைகளின் பெறுபேறுகளை அறிந்து கொண்டுவிட்டார்கள்.

கடந்த சில வருடங்களாக குடாநாட்டின் பரீட்சை முடிவுகள மிகவும் பின்தங்கியநிலையில் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஒரு காலத்தில் கொழும்பு மாவட்டப் பெறுபேறுகளுடன் சமவிகிதத்தில் இருந்த முடிவுகள் இன்று மிகவும் பின்தங்கிய நிலைக்குச் சென்றுவிட்டிருக்கின்றது.

கடந்தகால யுத்தங்களினால் இடப்பெயர்வுகளையும் அவலங்களையும் அடிக்கடி சந்தித்ததால்தான் இந்த நிலை என்று பொதுவான காரணம் ஒன்று கூறப்படுகின்றது. இதனைவிட அரசு சில விடயங்களில் வடபகுதிக் கல்வியைப் புறக்கணிக்கிறது எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆசிரியர் பற்றாக்குறை, துணை நூல்கள் கற்பித்தல், துணைச சாதனங்கள் என்பன பெருமளவில் அனுபபப்படாமை போன்ற பல்வேறு காரணங்களினால் குடாநாட்டின் கல்வித்தரம் கடந்த சில வருடங்களாக வீழ்ச்சி கண்டுள்ளது என்கின்றனர் பெரும்பாலான நோக்கர்கள்.

இது தொடர்பாகத் துறைசார்ந்த சிலருடன் சென்று நாம் கதைத்தோம். அவர்கள் தெரிவித்தவற்றை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

## துணைநூல்கள் இல்லை



ப. விக்னேஸ்வரன்
யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர்

1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ் மாவட்டப் பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்துள்ளன என்பது உண்மைதான். 95 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்குப் பின்னர் வசதி படைத்தவர்கள் - கல்வியில் கூடிய கவனஞ் செலுத்துபவர்கள் என பெருமளவானோர் இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர்.

பொருளாதாரத்துக்கும், கல்விக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

அந்தவகையில் பொருளாதார, வசதிபடைத்த பெருமளவானவர்கள் வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டதால் யாழ்ப்பாணத்தின் கல்விப்பெறுபேறுகள் வீழ்ச்சியடைகின்றன.

இந்தநிலையில், எமது முந்திய பெறுபேற்றுத் தொகையை எட்டிப்பிடிப்பதென்பது மிகவும் கஸ்ரமான விடயம்.

இதனைவிட இப்பொழுது மாதிரி வினாத்தாள்களைச் (Model Paper) செய்து பரீட்சையில் பிள்ளைகள் சித்தியடைவதை பரீட்சைத் திணைக்களம் விரும்பவில்லை.

இதனால், மாதிரிப் பரீட்சைகளில் இருந்து வருடாவருடம் பரீட்சை வினாத்தாள்கள் முற்றிலும் மாறுபட்டவையாக இருந்து வருகின்றன.

இதனைவிட புலமைப்பரிசில் பரீட்சார்த்திகளுக்கான போதுமான துணைநூல்கள் சிங்கள மொழியில் வருகின்றன. ஆனால், தமிழ்மொழியில் அந்தளவு நூல்கள் எவையும் கல்வி நிறுவகத்தால் வெளியிடப்படுவதில்லை. இதனால், சிங்கள மாணவர்களுடன் தமிழ் மாணவர்கள் போட்டிபோட முடியாத நிலை காணப்படுகின்றது.

அரசு சிங்களமொழி மூல ஆசிரியர்களுக்கு நிறையப் பயிற்சிகளை வழங்கிவருகின்றபோதிலும், தமிழ்மொழிமூல ஆசிரியர்களுக்கு அத்தகைய பயிற்சிகளை வழங்குவது குறைவு. அதிலும், யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை மிகக்குறைவு என்றுதான் சொல்லவேண்டும்.

இங்கு கடந்த காலங்களில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள் மற்றும யுத்த அவலங்களினால் ஆசிரியர்களும் பெரும் தாக்கங்களுக்கும் பொருளாதாரச் சுமைகளுக்கும் உள்ளாகியிருக்கின்றனர்.

இத்தகைய தாக்கங்களினால் குடாநாட்டில் சுமார் 70 வீதத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என்பது கணிக்கப்பட்டிருக்கிறது. இதுவும் மாணவர்களின் பெறுபேறுகள் வீழ்ச்சியடைவதற்கு ஒரு காரணம் ஆகும்.

இத்தகைய காரணங்களினால்தான் யாழ். மாவட்ட மாணவர்களின் பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்துள்ளன என்று கூறலாம. இருப்பினும், இத்தகைய பிரச்சினைகளை வெற்றிகொண்டு இனி வரும் காலங்களில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.

இவற்றுக்கு அப்பால் புலமைப்பரிசில் பரீட்சையைப் பொறுத்தவரையில் அந்த வயதுப் பிள்ளைகளுக்கு அது உளவியல் ரீதியில் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய பரீட்சை என்று கூறப்படுவதும் உண்டு. உளவியல் நிபுணர்கள் இத்தகைய பரீட்சை பிழையானது என்று கூடக் கூறியிருக்கிறார்கள். அகில இலங்கை ரீதியாக முதல் 10 இடங்களையும் பெறற மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஜபபான் செல்வதற்கு ஒரு புலமைப்பரிசில் வழங்கப்பட்டது.

அதற்குள் ஒவ்வொரு வருடமும் யாழ்ப்பாணத்து மாணவர்கள் ஒருவராவது இடம்பெறுவர். ஆனால், இப்பொழுது 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இங்கு எவரும் தெரிவுசெய்யப்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

## ஒவ்வாத வினாக்கள்



வே. ஞானகாந்தன்
யாழ். இந்து ஆரம்பப்பிரிவு அதிபர்

பரீட்சைக்கான சில வினாக்கள் சிங்களப் பகுதிகள், மலையகப் பிரதேசங்கள் மற்றும் அதனோடு ஒத்த பிரதேசங்களையும் தழுவியதாக எடுககப்படுகின்றன.

அத்தகைய கேள்விகளை எமது மாணவர்கள் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. குடாநாட்டைப் பொறுத்தவரை இங்கு வீதி ஒழுங்கமைப்பு, குறியீட்டு முறைகள் ஒழுங்கானதாக இல்லை. ரயில் போக்குவரத்தைப் பெரும்பாலான பிள்ளைகள் பார்த்திருக்கமாட்டார்கள். தொழிற்சாலைகள் இல்லை.

இந்தநிலையில், அத்தகைய விடயங்களில் வருகின்ற வினாககளை எமது பிள்ளைகள் சரியாகச் செய்யமுடியாத நிலை உள்ளது.

கடந்த வருடப் பரீட்சையில் மாலையில் மலரும் பூ எது? என்ற ஒரு கேள்வி போடப்பட்டது. அதற்கு 'கடுபுல்' என்ற விடை புள்ளியிடல் திட்டத்தில் (Marking Sceem) கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், 'கடுபுல்' என்ற அந்தப் பூ தென்னிலங்கையில் தான உண்டு. எனவே, அதனை எமது மாணவர்கள் எப்படித் தெரிந்து கொள்வது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எவரும் வினாத்தாள் தயாரிக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்படுவதில்லை. சிங்கள மொழியில் அந்தப் பகுதியின் சூழலை மையமாக வைத்து தயாரிக்கப்படும் வினாத்தாள் அப்படியே தமிழில் மொழிபெயர்க்கப்படுகிறது.

இதனை சம்பந்தப்பட்ட எமது தமிழ்ப்பிரதேசங்களின் கல்வியியலாளர்கள் பரீட்சைத் திணைக்களத்துக்குச் சுட்டிக்காட்டி எமது பிள்ளைகளின் சூழலுக்கு ஒத்துவராத விடயங்களை வினாக்களில் சேர்க்காமல் இருப்பதை உறுதிசெய்யவேண்டும். ஆனால், எம்மவர்கள் எவரும் அதில் அக்கறை செலுத்தியதாகத் தெரியவில்லை.

மலைகள், நீர்வீழ்ச்சி, சிகிரியா போன்றனவெல்லாம் பாடத்திட்டததுக்குள் உண்டு. இவற்றை நேரடியாக பிள்ளைகளுக்குக் காட்டவேண்டுமானால் தென்னிலங்கைக்குத்தான் அழைத்துச் செல்லவேண்டும். சிறுவர்களை பெருந்தொகையாக நீண்ட சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வது மிகவும் கடினமானது.

இந்தக் காரணங்களினால் யாழ். மாவட்ட மாணவர்களின் பெறுபேறுகள் சற்று வீழ்ச்சியடைவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

## மணியாஸ் கட்டை



செல்வி தா. குணரஞ்சினி
தரஇணைப்பாளர் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

சூழல் அவதானிப்பு என்ற விடயத்தின் கீழ் பல பொருள்களைப் பிள்ளைகளுக்குக் காட்டினோம். திருகணி, உறி தொடக்கம் பெரும்பாலான - பழைய வீட்டுப் பாவனைப் பொருள்களைப் பற்றியெல்லாம் படிப்பித்தோம்.

ஆனால், நாங்கள் எதிர்பாராதவிதமாக இந்த முறை 'மணியாஸ கட்டை' என்ற பொருளைப் பற்றிக் கேள்வி போடப்பட்டிருந்தது. மண்ணைப் போட்டு அழுத்திமெழுகுகின்ற ஒரு கட்டைதான் அது. பெரும்பாலான பிள்ளைகளுக்கு அதைப்பற்றித் தெரியாது. ந்ாங்களும் அதைப்பற்றிச் சொல்லிக்கொடுக்கத் தவறிவிட்டோம். கேள்வியைப் பார்த்த பின்புதான் மிகவும் கவலைப்பட்டோம்.

பல மூலிகைகளையும் செடிகளையும் எங்களுடைய பாடசாலையில் நட்டுவைத்து பிள்ளைகளுக்கு அதனைக் காட்டிப் படிப்பித்தோம். அதில் சதைகரைச்சான் என்ற செடியின் இலை எமது மண்ணில் நீளமானதாக வளர்ந்துள்ளது. ஆனால், வேறு சில பகுதிகளில் குறிப்பாக தென்னிலங்கையில் அந்த இலை வட்டவடிவமாக வளர்கிறது.

இந்தநிலையில், பரீட்சையில் வட்டவடிவமான இலையின் படத்தைப் போட்டார்கள். எமது பிள்ளைகளுக்கு அதனை என்னவென்றே தெரியவில்லை.

## அதட்டக்கூடாது



திருமதி த. தர்மரட்ணம்
ஆசிரியை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

பெற்றோர்கள் பிள்ளைகளை அன்பாகத் தட்டிக்கொடுத்து படிப்பிக்கவேண்டும். ஆனால், சிலர் அதட்டி - அடித்து படிப்பிக்கும் போது பிள்ளையினுடைய மனநிலை பாதிக்கப்பட்டு பரீட்சையை நன்றாக செய்யமுடியாத நிலையை ஏற்படுத்தும்.

'சரியாகச் செய்' என்று கூறலாம் ஆனால், பிழைவிட்டு விடாதே, பிழை விட்டு விடாதே என்று அடிக்கடி கூறக் கூடாது. அதுவும் பிள்ளையை பரீட்சை மண்டபத்தில் குழப்பி விடக்கூடியது. சூழலில் காணப்படும் பொருள்களையும் சூழலில் நடக்கின்ற நிகழ்வுகளையும் நன்றாக அவதானித்து அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகளை பெற்றோா ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

உதாரணமாக சந்தைக்குப்போகும் போது ஒருநாளாவது பிள்ளையையும் கூட்டிச்சென்று அங்கு நடக்கின்ற நிகழ்வுகளை அவதானிக்கவும் - வியாபாரிகள், தரகர் போன்றோருடன் கதைத்து சில விடயங்களை தெரிந்துகொள்ளவும் பெற்றோர்கள் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். வீட்டில் பிள்ளைகளுக்கு கல்வியை சில பெற்றோர் திணிக்கிறார்கள். அளவு கணக்கின்றி புத்தகங்களை வாங்கிக்கொடுத்து பிள்ளைகளின் சுமையை அதிகரிப்பதை பெற்றோர்கள் கைவிட வேண்டும்.

## பெற்றோர் அக்கறையில்லை



[illegible]ஞ்சோதி
இணுவில் மத்திய கல்லூரி
ஆரம்பப் பிரிவு அதிபர், தரம்-5 ஆசிரியர்

கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளைப் பொறுத்தவரை அங்கு வசதிபடைத்தவர்கள் தமது பிள்ளைகளை சேர்ப்பது மிகவும் குறைவு. அவர்கள் தமது பிள்ளைகளை நகர்ப்புறப் பாடசாலைகளில் சேர்த்து விடுகின்றார்கள்.

கிராமப்பாடசாலைகளில் பெரும்பாலும் வறிய மாணவர்களே சேர்க்கப்படுவதனால் அவர்களுக்குரிய பல்வேறு பிரச்சினைகளையும் தீர்த்து கல்வியைப் புகட்டுவது என்பது மிகவும் கடினமான விடயம்தான்.

இருந்தாலும் நாங்கள் இயன்றவரை முயற்சி செய்து வருடாவருடம் கணிசமான அளவு மாணவர்களை இப்பரீட்சையில் சித்தியடைய வைக்கின்றோம்.

கிராமப்புறங்களில் உள்ள பல பெற்றோர் தமது பிள்ளைகளின கல்வியில் கூடிய அக்கறை செலுத்துவதில்லை. புலமைப்பரிசில் பரீட்சைக்கென நடத்தப்படுகின்ற விசேட வகுப்புகளுக்குக்கூட பிள்ளைகளை அனுப்புவதில் அக்கறையின்றி இருக்கின்றார்கள்.

கடந்த 1998ஆம் ஆண்டு எமது பாடசாலையைச் சேர்ந்த மாணவன் ஒருவன் யாழ்.மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றான். எனவே, இங்கும் திறமையான பிள்ளைகள் இருக்கின்றார்கள்.

கிராமப்புறங்களில் இருந்து மேலும் பல பிள்ளைகளைச் சித்தியடையச் செய்யமுடியும். அதற்கு பெற்றோரின் பங்களிப்பு மிகவும் அவசியமானது.

பாடத்திட்டங்கள் அடிக்கடி மாற்றப்படுகின்றன; அதற்கான கைநூல்கள் அரசினால் எமக்கு அனுப்பப்படுகின்றன. ஆனால், சில பெற்றோர் இதனைப் பற்றி அறிந்து கொள்ளாமல் பழைய பாடத்திட்டத்துக்கு அமைவான புத்தகங்களை வாங்கி வாங்கிக் குவித்துவிடுகிறார்கள். இது பிள்ளைகளை குழப்ப நிலைக்கு உள்ளாக்கி விடக்கூடியதாகும்.

புலமைப்பரிசில் பரீட்சைக்கு அனுபவம் மிக்க ஆசிரியர்களே சிறந்தமுறையில் படிப்பிக்க முடியும். புதிய ஆசிரியர்களுக்கு போதிய செயலமர்வுகள், பயிற்சிகள் வழங்கப்படுவதில்லை. எனவே, அதனாலும் யாழ்ப்பாணத்தின் பெறுபேறு வீழ்ச்சியடைந்து செல்லுகிறது என்று கூறலாம்.

## அனுபவம் மிக்க ஆசிரியர் இல்லை



யோ. திருஞானம்
பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்.

அனுபவம் மிக்க ஆசிரியர்கள் இல்லை. இங்கு பல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இதனால், தொண்டர் ஆசிரியர்களையும், பாடசாலைகளில் உதவியாளர்களாக இருப்பவர்களையும் பெரும்பாலான பாடசாலைகள் ஆரம்பப் பிரிவுக்கு ஆசிரியர்களாக நியமிக்கின்றார்கள். பட்டதாரிகள் மற்றும பயிற்றப்பட்ட ஆசிரியர்களை ஆரம்பப்பிரிவுக்கு நியமிப்பதற்கு பாடசாலைகளும் அதே நேரம் சம்பந்தப்பட்ட பட்டதாரிகளும் பின் நிற்கின்றார்கள்.

பிள்ளைகளிடம் வாசிப்புப் பழக்கம் ஏற்படுத்தப்படவேண்டும். புலமைப்பரிசில் பரீட்சையை பொறுத்தமட்டில் குறிப்பிட்ட நேரத்துக்குள் கேள்விகளை விரைவாக வாசித்து செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது.

**அற்புதன்**

கற்பித்தலுக்கான துணைச் சாதனங்கள் இப்போது பாடசாலைகளில் மிகவும் குறைவாகவே உள்ளன. சிறுவர்களைப் பொறுத்தவரை படங்கள் மற்றும் உபகரணங்களைக் காண்பித்து கற்பிக்க வேண்டியது அவசியமானது. அத்தகைய துணைச சாதனங்கள் இல்லாததாலேயே பரீட்சையைப் பிள்ளைகள் சிறப்பாகச் செய்யமுடியாதநிலை உள்ளது. கல்விச் சுற்றுலாக்களும் சிறுவா களைப் பொறுத்தவரை பெரும்பாலும் இல்லை.

'எனது முதல் புகைவண்டிப் பயணம்' என்ற தலைப்பில் எழுதுமாறு கேள்வி போடப்படுகிறது. எமது பிள்ளைகளுக்கு புகைவண்டி பயணத்தைப்பற்றி எதுவுமே தெரியாது.

இது ஒருபுறமிருக்க தனியார் கல்வி நிறுவனங்களின் செயற்பாடுகளினால் தான் இன்று மாணவர்கள் ஓரளவுக்காவது சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றார்கள் - என்றார்.

(தொடர்ந்து வரும்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நாயன்மார்கட்டு அரசடி விநாயகர்
ஆலய ஆதீன கர்த்தாக்களும், பிரதம குருமாருமான
**சிவஸ்ரீ ச.மகேஸ்வர குருக்கள்**
**சிவஸ்ரீ ச.மகாலிங்கசிவ குருக்கள்**
ஆகியோர் 06.02.2004 வெள்ளிக்கிழமை அன்று
அகில இலங்கை சமாதான நீதிவான்களாக
நியமனம் பெற்றதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி
ந.விஜயரத்தினம் ஐயர்,
ந.சிவனேசகுருக்கள்.

*புதுக்குளங்கரை,*
*அல்வாய்.*
(28307)(31-12-13-32)



# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
02
04
1914



மறைவு
09
02
1996

**அமரர் சிவா இராஜேந்திரன்**
(சட்டத்தரணி, சமாதான நீதிவான், சமூகஜோதி)

ஆறவில்லை எம் மனது ஆண்டு எட்டாயினதே!
உங்கள் இழப்பை மறந்திடுமோ எம் நெஞ்சம்?
ஆயிரம் உறவுகள் வந்தாலும் உங்கள்
அறிவு புகட்டும் பாசத்துக்கு ஈடாகுமோ அப்பா?

*"சிவவில்லா"*
*உடுவில் வீதி,*
*மானிப்பாய்.*
(28310)(32-13-12)
- குடும்பத்தினர்.


## நாய்களுக்குத் தடுப்பூசி

அச்சுவேலி,பெப்.10

புத்தூர் பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது. தடுப்பு மருந்து ஏற்றப்படும் நிலையங்களுக்கு வளர்ப்பு நாய்களைக் கொண்டு சென்று நோய்த் தடை மருந்தை ஏற்றிக்கொள்ளு மாறு பிரதேச சபை உப அலுவலகப பொறுபபதிகாரி இ.ஜெயகாந்தன் அறிவித்துள்ளார்.

10ஆம் திகதி செவ்வாய்ககிழமை

★9 - 10.30 மணி நவக்கிரி எல்லா ளன் சனசமூக நிலையம்.

★10.30 - 12 மணி நவக்கிரி கிராம சேவகர் அலுவலகம்.

★12.00 - 1.30 நவக்கிரி வடக்கு வெளி சனசமூக நிலையம்.

11ஆம் திகதி புதன்கிழமை

★9 - 10.30 புத்தூர் கிழக்கு குமர குருபரன் சனசமூக நிலையம்.

★10.30 - 12 மணி புத்தூர் கிழக்கு அறிவொளி சனசமூக நிலையம்.

★12 - 1.30 மணி புத்தூர் கிழக்கு சரஸ்வதி சனசமூக நிலையம்.

12ஆம் திகதி வியாழககிழமை

★9.00 - 10.30 வாதரவத்தை விக்கி னேஸ்வரா சனசமூக நிலையம்.

★10.30 - 12 வாதரவத்தை எழுச் சிக்குடியிருப்பு.

★12 - 1.30 வாதரவத்தை விர வாணி இந்திரன் சனசமூக நிலையம்.

(ம-11)


## தவறிவிட்டது

*தவசிகுளம்,கொடிகாமத்தைச் சேர்ந்த செல்லன் தர்மலிங்கம் என்ப வருடைய மோட்டார் சைக்கிள் முன் பதிவுப் பத்திரம் (M.T.A) போட்டோ. மோட்டார் சைக்கிள் பில் போன்ற ஆவணங்களடங்கிய பை ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள் ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.*

0777 251034
0777 251017 (28306)(39)


## கரப்பந்தாட்ட இறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.10

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய ஆடுகளத்தில் இடம்பெறவுள்ளது.

சி.எஸ். செல்வராசா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆ.தேவராசா கலந்துகொள்வார்.

இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும், ஆவ ரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (ம-5)


## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
## கிளை முகாமையாளர் பதவி விண்ணப்பம் -குறி.இல.208/16

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்தில் கிளை முகாமையாளர் பதவிக் கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஊர்காவற்றுறையில் உள்ளோ ருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பதாரர் க.பொ.த. (சா/த) இல் கணிதம், தமிழ் உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை **20.02.2004** ஆந் திகதிக்கு முன்னர் *பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.ச., ஊர்காவற்றுறை* என்னும் முகவரிக்கு நேரிலோ, பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்கலாம்.

- பொது முகாமையாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்.

(C-33207)(12-32-13)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



அல்வாய் தெற்கு, மாலுசந்தியைச் சேர்ந்தவரும்
வியாபாரிமூலை J/399 கிராம உத்தியோகத்தரும்
அல்வாய் வடமத்தி J/398 பதிற்கிராம
உத்தியோகத்தரும்
சிறந்த சமூகசேவையாளருமாகிய
**திரு.இராசையா இராசேந்திரன்**
அவர்கள் 29.01.2004இல் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பதில் மாவட்ட நீதிவான் திரு.அ.க.நடராசா அவர்களின் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதையிட்டு, அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவரது சேவைகளும் பணியும் நல்லமுறையில் தொடர மேன்மேலும் வளர மாலுசந்தி ஸ்ரீ காமாட்சி அம்பாளின் பாதாரவிந்தங்களைப் பணிகின்றோம்.

மாலுசந்தி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய
பரிபாலன சபையினரும்,
காமாட்சி விளையாட்டுக் கழகத்தினரும்.

*மாலுசந்தி,*
*அல்வாய்.*
(சி-33206)(31-12-17)



# காத்திருப்பதற்கும்

தாமதத்திற்கும் பிரச்சினைகளுக்கும் முற்றுப் புள்ளி வைப்போம்.

அதி சக்தி வாய்ந்த

# SHARP

**SF 1118 பிரதியெடுக்கும் கருவி**



SF-1020
நிமிடத்திற்கு 20 பிரதிகள்



SF-2030
நிமிடத்திற்கு 30 பிரதிகள்

ஒரு பிரதிக்கு **37** சதம் மட்டுமே



SF 1118

- நிமிடத்திற்கு 18 பிரதிகள்
- நம்பகமான தாள் அளிக்கும் ஒழுங்கு
- தெளிவான பிரதிகள்
- உண்மையான மூலப் பிரதிகளின் மீள் உற்பத்தி
- மேலதிக சக்தியை சேமிக்கும் மாதிரி

அசல் SHARP டோனர் உயர் தரத்திலான அதிக பிரதிகளைப் பெறுவதை உறுதி செய்கிறது.

Tradlanka Advertising

காட்சியறைகள் :
யாழ்பாணம் - தோ.பே: 021-2225150
வவுனியா - தோ.பே: 024-2220081
மட்டக்களப்பு - தோ.பே: 065-2226385
திருகோணமலை - தோ.பே: 026-2220005

SHARP
be sharp

விலை ரூ. 138,600/= (வற் உடன்)

ஏக முகவர்கள்
**பிரவுன் அன்ட் கம்பனி லிமிட்டட்**
481, டீ. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு-10.
தொ. பே: 2697111, 2698411 பக்ஸ்: 2698489, 5 337191
e-mail : oasales@brownsgroup.com
உடனடி சேவை அழைப்பு-2696870

நூலகம்

கல்வி அபிவிருத்தி, வீட்டுப் பிரச்சினை, அரச வேலைவாய்ப்பு:

# மூன்று கோரிக்கைகளை ஏற்கும் கட்சியுடனேயே தேர்தல் கூட்டுக் குறித்து இ.தொ.கா.பேச்சு!

## நிர்வாக சபை கூடித் தீர்மானம் நிறைவேற்றம்

இ.தொ.கா. முன்வைத்துள்ள மூன்று அடிப்படைத் தேவைகள் அடங்கிய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் கட்சியுடனேயே எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டுச்சேருவது குறித்து இ.தொ.கா. பேச்சு நடத்தும்.

இ.தொ.கா. தலைவரும், பொதுச் செயலாளரும், வீடமைப்புப் பெருந் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் இவ்வாறு அறிவித்துள்ளார்.

இ.தொ.கா. தலைமையகமான சௌமிய பவனில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற இ.தொ.கா. நிர்வாகச்சபைக் கூட்டத்திலேயே இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மலையக சமூகத்தினரின் கல்வி அபிவிருத்தி, வீட்டுப் பிரச்சினையைத் தீர்த்தல், இன விகிதாசாரப்படி அரச வேலை வாய்ப்புகள் வழங்குதல் என்பனவே இ.தொ.கா.வின் மூன்று கோரிக்கைகளுமாகும்.

“மலையக மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதையே எமது குறிக்கோளாகக்கொண்டு சேவையாற்றி வருகிறோம். நமது மக்களின் அடிப்படைத் தேவைகளை எதிர்காலத்திலும் நிறைவேற்ற வேண்டியது எமது கடமை. எமது கடமையிலிருந்து நாம் ஒரு போதும் விலக மாட்டோம்.

“இ.தொ.கா. எந்தக் கட்சியுடன் சேர்ந்து தேர்தலுக்கு முகம் கொடுக்கப்போகின்றது என்ற வினாவை அனைவரும் எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். நாம் முன்வைக்கும் மூன்று அடிப்படைத் தேவைகள் அடங்கிய கோரிக்கைகளை பூர்த்தி செய்வோருடன் எதிர்வரும் தேர்தல் கூட்டுத் தொடர்பாக பேச்சு நடத்த நாம் தயார்.

“எதிர்காலத்தில் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக் கூடியதாக அமையும் கோரிக்கைகளையே நாம் முன்வைத்துள்ளோம்” - இவ்வாறு ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

### அதிபர் கூட்டம் ஒத்திவைப்பு

தென்மராட்சி,பெப்.10

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கு நாளை புதன்கிழமை நடைபெறவிருந்த கூட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(எ-117)

### வரட்சி நிவாரணம் வழங்குவது ஆரம்பம்

கொழும்பு,பெப்.10

குருநாகல், பொலன்னறுவை, அநுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் வரட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதை அரசு ஆரம்பித்துள்ளதாக நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி தெரிவித்தார்.

இந்த நிவாரணம் அத்தியாவசிய உணவுப் பொருள்களாக இருக்குமென்றும், மாவட்ட செயலாளர்கள் மூலம் நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்படுமென்றும் அவர் மேலும் கூறினார்.

### மெய்வன்மை போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த மெய்வல்லுநர் போட்டியில், பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக வர்த்தகத்துறை முதுநிலை விரிவுரையாளர் க.க. அருள்வேல் கலந்துகொள்வார்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி ஸ்ரீரமணி அருள்வேல் வழங்குவார். (எ-8)

★ ★ ★

தென்மராட்சி,பெப்.10

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் 100ஆவது ஆண்டு இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 14ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் இ.கயிலைநாதன் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்கு முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்துகொள்வார். (எ-117)

## (C.I.S.R.S) கருத்தரங்கு

தலைப்பு :- “தன்னாட்சி இடைக்கால நிர்வாகப் பிரேரணையும் தென்னிலங்கையில் எழுந்துள்ள சூழ்நிலையும் தமிழரின் எதிர்காலமும்”

தலைமை :- திரு. N.A.விமலேந்திரன் (அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை)

ஆசியுரை :- பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் (தென்னிந்திய திருச்சபை)

கருத்துரை வழங்குபவர் :- திரு. A.குமாரவேல் (விரிவுரையாளர், யாழ்ப்பாணக்கல்லூரி)

இடம் :- யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.வைத்தியசாலை முன்பாக)

காலம் :- 11 பெப்ரவரி 2004 பி.ப. 3.30 மணி

நன்றியுரை :- வண.G. நடராஜா (இயக்குநர் C.I.S.R.S)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வண. G.நடராஜா*
*இயக்குநர்*
*C.I.S.R.S.*

(28316) (40-13-17-31)

உ

## கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த சங்காபிஷேகம்

*பேரன்புடையீர்!*

மேற்படி ஆலய வருடாந்த சங்காபிஷேகம் இன்று (10.02.2004) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

காலை 10.00 மணிக்கு அம்பாளுக்கு 1008 சங்குகளால் அபிஷேகமும் தொடர்ந்து விசேட பூஜையும் நடைபெறும்.

மாலை 5.00 மணிக்கு விசேட பூஜையைத் தொடர்ந்து சந்தண்டிகையில் அம்பாள் திருவீதி உலா வருவார்!

அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!

*கோப்பாய் பலானை,*
*கண்ணகை அம்மன் தேவஸ்தானம்.*

- ஆலய பரிபாலன சபையினர்.

(சி-33208)(31-13-17)



*வேலணை கிழக்கு மணியகாரர் வீட்டடி*

## கோபுரத்து வைரவர் கோயில் பிரதிஷ்டா கும்பாபிஷேகம்

நாளை புதன்கிழமை (11-02-2004) காலை 7.00 மணிமுதல் கிரியைகள் இடம்பெற்று, 8.30 மணிமுதல் 10.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் இடம்பெறும். தொடர்ந்து விசேட அபிஷேகம், பூஜை என்பன இடம் பெறும்.

இன்று மாலை 4.30 மணிமுதல் யாகபூஜை நடைபெறும்.

(28309) அறங்காவலர்.


நாகம்ஸ் சுன்னாகம்

அர்ஜுன், சிம்ரன், நாசர், வடிவேல் நடித்த




காட்சிகள் : 11.00. 3.00. 7.00. (பு.நே.) (C/33048)(12)

ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந்த் நடித்த

ஜெயம்

(ரீல்ஸ்)

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

(C-33050) (12)

லிபேட்டி அச்சுவேலி

விக்ரம், த்ரிஷா, விவேக், மனோரமா மற்றும் பலர் நடித்த

சாமி

(ரீல்ஸ்)

காட்சிகள்.: 3.00, 7.00. (பு.நே.)

(C/33049)

நிறைஞ்சனாஸ் சங்கானை

சிம்பு, ஷர்மி நடித்த

காதல் அழிவதில்லை (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

HULK

(C-32981) (36)


# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து சங்கரப்பிள்ளை (ஜே.பி.)

(ஓய்வுபெற்ற அதிபர், நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்)

நெடுந்தீவு, நடுக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து சங்கரப்பிள்ளை நேற்று (09.02.2004) திங்கட்கிழமை திருநெல்வேலியில் காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், பாலகுமார் (சுவிஸ்), ஜெயக்குமார் (கனடா), சுரேஸ்குமார் (ஹொலண்ட) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி லேன்,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (சி-33210)(37-13-12-31)

தகவல்: மனைவி, மைத்துனர்கள்.

## திருமதி உதயகுமார் ரஞ்சினிதேவி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உதயகுமார் ரஞ்சினிதேவி 07.02.2004 சனிக்கிழமை இரவு அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அல்லைப்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்லைப்பிட்டி.* (28314)(31-17-13)

தகவல்: தவநாயகி (உபதபாலதிபர்).

## சோமசுந்தரம் கந்தசாமி

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கந்தசாமி நேற்று (09.02.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - இராசமணி ஆகியோரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற நாகலிங்கம் - சின்னம்மா ஆகியோரின் மருமகனும் பராசக்தியின் பாசமிகு கணவரும் அற்புதராஜா (ஆசிரியர், அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்), சுதர்சன் (பிரான்ஸ்), கேதீஸ்வரன் (பிரான்ஸ்), உமாபதி (கிருஸ்ணா வீடியோ) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் வாசுகி, கௌசலா ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவதர்சி, சுகந்தன், நிலானா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற செல்வமணி, காலஞ்சென்ற அன்னலக்ஷ்மி, நாகலக்சுமி, அன்னலிங்கம் ஆகியோரின் சகோதரனும் நல்லம்மா, குலசிங்கம், நாகேஸ்வரி, கணேசு, தேவராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2004) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னையா லேன்,*
*கேணியடி, கொக்குவில் மேற்கு.* (28284)(34-13-17-31)

தகவல்: க.அற்புதராஜா (மகன்).

## திருமதி செல்வநாயகம் இரத்தினம்

புலோலி கிழக்கு, பருத்தித்துறையை பிறப்பிடமாகக்கொண்ட திருமதி செல்வநாயகம் இரத்தினம் அவர்கள் நேற்று (09.02.2004) திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற சகோதரிகளான பார்வதிப்பிள்ளை, சிவக்கொழுந்து, சகுந்தலா, சரஸ்வதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரா, சாந்தினி, சின்னத்தங்கரமணி, சாந்தா, சங்கரப்பிள்ளை (குவைத்), சாருமதி (லண்டன்) காலஞ்சென்ற சிவகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும் விநாசித்தம்பி (அரச கட்டட ஒப்பந்தகாரர்), பாலச்சந்திரன், அம்பிகாபதி (களஞ்சிய பொறுப்பாளர் பரு.ப.நோ.கூ.ச.), ரணசிங்கம் (கால்நடை திணைக்களம், வவுனியா), ருஸ்யேந்திரமணி (ஆசிரியர், இறக்குவானை), கந்தவேள் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நந்தகோபன் (அரச கட்டட ஒப்பந்தகாரர்), கீதாஞ்சலி (தையல் ஆசிரியர்), துவாரகோபன், தர்சினி, கோபிதாஸ், தேவதாஸ், சுதர்சினி, ராஜினி, தர்மபாலினி, ஜெயப்பிரசாத், சயித்தா, பௌதாரணி (குவைத்), பைரவி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.02.2004) செவ்வாய்க்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோரியடி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*“களையாவோடை”,*
*புலோலி வடக்கு,*
*பருத்தித்துறை.* (சி-33209)(31-17-13)

தகவல்: க.விநாசித்தம்பி (மருமகன்).

## திருமதி மேரி செல்வமணி கந்தப்பு

(இளைப்பாறிய ஆசிரியை, மருதானை கொழும்பு)

மருதங்கேணி தெற்கைப் பிறப்பிடமாகவும், பழைய பொலீஸ் நிலைய வீதி சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரி செல்வமணி கந்தப்பு அவர்கள் 08.02.2004 ஞாயிறு காலை 10.30 மணிக்கு கிறீஸ்துவுக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் ஸ்ரீபன் கந்தப்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு.திருமதி J.S.சின்னையா (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற ஸ்ரீபன் தேவராஜா மற்றும் ஸ்ரீபன் ஜெயராசா (லண்டன்), காலஞ்சென்ற ஸ்ரீபன் ஞானராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயலக்சுமியின் வளர்ப்புத் தாயாரும் ஜோசேப் செல்லத்துரை (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), சாவகச்சேரி அதிசயம் செல்வமலர், அலிஸ் செல்வரஞ்சிதம், றோஸ் செல்வநாயகி, சாமுவேல் செல்வநாதன் (ஓய்வுபெற்ற உதவி கோட்டக்கல்வி அதிகாரி, கண்டாவளை) எலிசெபெத் செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தேவமலர் மற்றும் மு.சிற்றம்பலம் (ஓய்வுபெற்ற அதிபர், ஆழியவளை), றூத்மேரி கமலா, T.இராசரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர், ஆழியவளை) ஆகியோரின் மைத்துனியும் R.செல்வராணி (கொழும்பு), றோஸ் (லண்டன்) அவர்களின் அன்பு மாமியாரும் ஸ்ரீபன் தேவசீலன் (ஆஸ்திரேலியா), ஸ்ரீபன் ஜெயசீலன் (லண்டன்), ஜீவன் (லண்டன்), தர்மினி (லண்டன்), அகந்தன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், ஜெயச்சந்திரனின் வளர்ப்புப் பேர்த்தியும் செலினாவின் (ஆஸ்திரேலியா) பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (11.02.2004) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, சாவகச்சேரி தென் இந்திய திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முகவரி:*
*பழைய பொலீஸ் நிலைய வீதி,*
*சாவகச்சேரி.*

தகவல்: மகன் - ஸ்ரீபன் ஜெயராசா, சகோதரி - செல்வராணி இராசரத்தினம்.

(28317)(31-13-17)

# வைகோ பிணை அனுமதிக்கு தடை விதிக்க நீதிமன்று மறுப்பு

சென்னை,பெப்.10

ம.தி.மு.க.பொதுச்செயலாளர் வைகோவுக்கு பிணையில் செல்ல வழங்கப்பட்டுள்ள அனுமதியை ரத்துச செய்யும்படி கோரி தமிழக அரசு சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை சென்னை மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

விடுதலைப் புலிகளை ஆதரித்துப பேசிய குற்றச்சாட்டின் பேரில் 'பொடா' சட்டத்தின் கீழ் வைகோவைத் தமிழக அரசு கைதுசெய்தது. 'பொடா' சிறப்பு நீதிமன்றம் அவருக்குப் பிணையில் செல்ல அனுமதி வழங்கியது. அவர் தற்போது பிணையில் விடுதலையாகி உள்ளார்.

இந்நிலையில் வைகோவின் பிணை அனுமதியை ரத்துச் செய்யும்படி கோரி சென்னை மேல் நீதிமன்றத்தில் மனு ஒன்றைச் சமர்பித்தது. இந்த மனுத் தொடர்பாக நேற்று சென்னை மேல் நீதிமன்றம் ஆராய்ந்தது அதனைத் தொடர்ந்து தமிழக அரசின் கோரிக்கை நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது.

எனினும் வைகோவுக்கு பிணை அனுமதி வழங்கப்பட்டமையை மறுபாி சீலனை செய்யக்கோரும் தமிழக அரசின் மேன்முறையீட்டு மனுவை விசாரணைக்கு ஏற்கலாம் என்று நீதிமன்றம் தெரிவித்தது.

தனக்கு வழங்கப்பட்ட பிணை அனுமதி நிபந்தனைகளை மேலும் தளர்த்தக்கோரி வைகோ தாக்கல் செய்துள்ள மனுவுடன் சேர்த்து தமிழக அரசின் இந்த மனுவையும் விசாரணை செய்ய நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது. (ஒ-9)

## திருமலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதிகளும் இந்த முக்கிய சந்திப்பில் கலந்துகொண்டனர். காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு முற்பகல் 11.10 மணிவரை மிகவும் சிநேக பூர்வமாக இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் அனைவருமே இதனை தமிழ் மக்களின் இலட்சியத்தேர்தலாக கருத வேண்டும் எனவும் தன்னிச்சையான பிரசாரமின்றி ஒட்டுமொத்தமான ஓர் அணியில் நின்று தமிழ்மக்களின் அனைத்து வாக்குகளையும் பெற்று தங்களின் நிலையை சர்வதேசத்திற்கும் உணர்த்த வேண்டும் எனவும் சூளுரைத்துள்ளனர்.

கட்சிப்பிரமுகர்களும் இந்தச்சந்திப்பின் போது இணைந்து கொண்டுள்ளனர்.

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 14 ஆம் திகதி கட்சி கூடும் எனவும் அவர் மேலும் கூறினார்.

"தமிழ்க் கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ள நான்கு கட்சிகளும் தனிததுவமாக வேட்பாளர்களை நியமித்து ஓரணியில் போட்டியிடுவது தான் ஆரோக்கியமான முடிவாக இருக்கும், தேர்தல் முடிந்த பின் எம்.பிக்களைத் தெரிவு செய்வது உகந்ததாக இருக்காது என்பதே எமது கட்சியின் விருப்பம்" - என்று அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

## காபந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனக்கு அறிவிக்குமாறும் அவர் பிரதமரைக் கேட்டிருக்கிறார். ஜனாதிபதியினால் புதிதாக நியமிக்கப்பட்ட அமைச்சர்களான டி.எம்.ஜயரத்ன, லஷ்மன் கதிர்காமர் ஆகிய இருவரும் இந்த அமைச்சரவையில் உள்ளடங்குவர்.

ஜனாதிபதி கையேற்ற பாதுகாப்பு, உள்துறை, ஊடகத் துறை ஆகிய மூன்று அமைச்சுக்களும் அவரிடமே தொடர்ந்து இருந்துவரும் எனத் தெரிகிறது.

காபந்து அரசின் புதிய அமைச்சர்கள். யார் என்ற விவரம் இவ் வாரத்தில் அறிவிக்கப்படலாம்.

## மின்கம்பத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதிக்குக்குறுக்கே வீழ்ந்தது. அதனுடன் இணைக்கப்பட்ட கேபிள்களும் அறுந்து தொங்கின. சம்பந்தப்பட்ட லொறி தென் பகுதியைச்சேர்ந்தது என்றும் - லொறிச்சாரதி மது போதையில் இருந்தார் என்றும் - கூறப்படுகிறது. (ஒ-9)

## கண்காணிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின்னர் வன்னி செல்லும் புருகொவ்டே அங்கு சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்திப்பார் என்றும் -

கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்குக் - கிழக்கில் கண்காணிபபுக் குழுவின் செயற்பாடுகளையும், மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளையும் மதிப்பிடுவதே இவரது சுற்றுப்பயணத்தின் நோக்கம் என்று கூறப்படுகிறது.

## கடந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னார்.

ஐ.தே.மு.அரசு கடந்த இரண்டு வருடங்களாக சமாதானத்தை நிலைநிறுத்தி பிரச்சினைக்குத் தீர்வுகாணவும், நாட்டில் சிதைவுற்றிருந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில்தான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கிறது. எடுத்த முயற்சிகளால் கிடைக்கப்பெற்ற பலாபலன்கள் மக்களை சென்றடைய முன்னரே இந்த நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே, பொதுமக்களுக்கு கிடைக்க வேண்டிய உரிய பிரதிபலன் அவர்களைச் சென்றடைய வேண்டுமெனில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் நாம் வெற்றியடைய வேண்டும். -என்றார் பிரதமர்.

வேட்பாளரின் தெரிவுக்குப் பிரதமரின் தலைமையில் குழுவொன்றை அமைப்பது எனவும் - தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பிறிதொருகுழு ஒன்றை நியமிப்பது எனவும் - கட்சி அங்கத்தவர்களின் பிரதான கூட்டத்தை கொழும்பு நகரில் நடத்துவது எனவும் - நேற்றைய கலந்துரையாடலில் முடிவுசெய்யப்பட்டது.

அமைச்சர் அலுவலகத்திலிருந்து

# தனது தனிப்பட்ட கோவைகளை எடுக்க முன்னாள் அமைச்சருக்குக் கட்டுப்பாடு

## பதவியிழந்த பாக்கீர் மாக்காரின் அனுபவம் இது

முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தனது தனிப்பட்ட கோவைகளை அமைச்சு அலுவலகத்திலிருந்து எடுத்துச்செல்வதற்கு எதிராகக் கோட்டை பொலீஸ் நிலையதில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பாடல் அமைச்சில நேற்று பகல் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவரே இத் தகவலைத் தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

அமைச்சிலுள்ள எனது தனிப்பட்ட கோவைகளை எடுக்க விடாமல் பொலஸாரைக்கொண்டு தடுப்பது என்னவிதமான அரசியலென்பது எனக்குப்புரியவில்லை.

பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் ஆட்சிப்பீடமேறிய பிரதமருக்கு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றும் உரிமை ஜனாதிபதியால் தடுக்கப் பட்டுள்ளது. இது எந்தவிதமான ஜனநாயகம் என்பது புரியாத புதிராக இருககின்றது - என்றார் அவர்.

தாம் இரண்டு வருட காலம் அமைசசுப் பொறுப்பில் இருநத சமயம் தமக்குப்பலவிதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய அதிகாரிகளுக்கும் தொழிற் சங்கதினருக்கும் முன்னாள் அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

தனது அமைச்சின் கீழ் இயங்கிய ஊடக நிறுவனங்களின் தலைவர் மற்றும் ஊடகவியளாளர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

செய்தியாளர்களது கேள்விகளுககும் அவர் பதிலளித்தார்.

*செய்தியாளர்:* நீங்கள் தபால், தொலைத்தொடர்பு அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளீர்கள் என ஜனாதிபதியிடமிருந்து உத்தியோக பூர்வமாக உங்களுக்கு கடிதம் வந்ததா?

*முன்னாள் அமைச்சர்:* இல்லை இருந்தும் புதிய அமைச்சர் சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் அமைச்சிலுள்ள எனது தனிப்பட்ட கோவைகள், பொருள்களை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டபோது அதற்கு எதிராகக் கோட்டைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

*செய்தியாளர்:-* முறைப்பாடு செய்தது யார்?

*முன்னாள் அமைச்சர்:-* அமைச்சின் செயலாளர் என நினைக்கின்றேன்.

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் நிலவும் வெறிபிடித்த அதிகாரப் போட்டியும், பகைமையும், தமிழ்மக்களின் பிரச்சினைக்கு நீதி வழங்க மறுக்கும் கடும்போக்கும் இலங்கையின் அரசியல் உறுதி நிலையை ஆழமாக ஆட்டம் காணச் செய்துள்ளன.

சமாதானத்திலும், சமாதான வழிமுறையிலான தீர்விலும் தமக்கு ஆழமான, நேர்மையான பற்றுறுதி இருக்கின்றது என்பதை விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளது.

கொழும்பில் அரசியல் நெருக்கடியும், குழப்பநிலையும் நிலவியபோதும், விடுதலைப் புலிகள் போர்நிறுத்தத்தை தொடர்ந்து இறுக்கமாகக் கடைப் பிடித்து சமாதானத்தை ஏற்படுத்துவதில் உறுதியாக இருப்பார்கள்.

பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதால் சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதில் தாமதங்கள் ஏற்படலாம் இந்நிலையைக் கருத்தில்கொண்டு அவசர மனிதாபிமானத் தேவைகளை எதிர்நோக்கி நிற்கும் தமிழ் மக்களுக்கு உடனடியாக நிவாரணம் மற்றும் அவசர உதவிகளை வழங்குவதற்கு சர்வதேச நாடுகள் முன்வரவேண்டும்.

தமிழ்மக்களின் நியாயமான உரிமைகளையும், அரசியல் அபிலாசைகளையும் அங்கீகரித்து தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு சமாதான வழிமூலம் தீர்வுகாண முன்வரும் அரசியல் சக்திகளுக்கு சிங்கள மக்கள் ஆதரவு வழங்கவேண்டும்.

அத்துடன், தமிழ் மக்களுடன் சமாதானமாக, ஒற்றுமையாக ஐக்கியப்பட்டு வாழ்வதா அல்லது தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையைப் பிரயோகித்து பிரிந்து சென்று தனியரசை அமைப்பதற்கு அவர்களை நிர்ப்பந்திப்பதா என்ற இறுதி முடிவை சிங்கள மக்கள் தான் இத்தேர்தலில் மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு அவர் தெரிவித்திருக்கிறார்.

# வவுனியாவில் போலி நோட்டுக்கள்!

வவுனியாவில் போலி பணநோட்டுக்கள் அச்சிட்ட இருவர் வவுனியா பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள ளனர். இவர்களிடம் இருந்து பணம் அச்சிடும் இயந்திரம், கணனி போன்றனவும் ஆயிரம் ரூபா போலி நோட்டுக்கள் மூன்றும் கைப்பற்றபட்டுள்ளன எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.

மகாகச்சக்கொடி என்ற பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவரான இதே இடத்தைச் சேர்ந்த 15 வயதுடைய குமாரதாசகே வசந்தகுமார என்பவரும், அடபகஸ்கட பிரதேசத்தைச் சேர்ந்த டி.எம்ரத்னபால (30) என்ற நபரும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

ரத்னபால கள் குடித்துவிட்டு போலி ஆயிரம் ரூபாவை மாற்றியபோது கடைக்காரருக்கு பணத்தில் சந்தேகம் ஏற்படவே பொலீஸாரிடம் முறையிட்டார். அதையடுத்து சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

MICRO COMPUTER TRAINING CENTRE
MCTC அரசடி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
புதிய பிரிவு ஆரம்பம் : 15.02.2004
அத்துடன் பாடசாலை, அலுவலகம் செல்பவர்களின் நலன் கருதி கணனி கற்கைகள், சிறுவர்களுக்கான கணனி கற்கைகள் என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன.
பேச, எழுத, வாசிக்க ஆங்கில வகுப்புகள்
11.02.2004 மாலை 6.00 மணிக்கு
ஆசிரியர்: BRITTO
நவாலி, மானிப்பாய். MCTC நிர்வாகி.
(28255)(31-12-17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
நாகலிங்கம்
சின்னராசா

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து மறைந்து போனாலும் உங்கள் நினைவு மட்டும் எம்மை விட்டு மறையாது!

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (10.02.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் அவரது இல்லத்தில் நடைபெறும்.

லோட்டன் வீதி, மானிப்பாய். (28305)(12-17) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### எஸ்தாக்கி வலத்தீன்

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைச் சேர்ந்த எஸ்தாக்கி வலத்தீன் நேற்று (09.02.2004) காலமானார்.

அன்னார் திரேசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பார்பரம்மாவின் அன்புச் சகோதரனும் யூது நாயகம், மேரிராணி, டேவிட் அன்ரனி (சுவிஸ்), மரியம்மா, மேரி சிஸிலியா (ஆசிரியை மகளிர் கல்லூரி, சாவகச்சேரி), ஸ்ரீ கிருஸ்தீன் அம்மா (பிரான்ஸ்) ஆகியோரது அன்புத் தந்தையும் மேரியோசப்பின், செபமாலை, ஜெயந்தி (சுவிஸ்), ராசசேகரம் (பிரான்ஸ்), ஞானராஜ், அன்ரன் கிறிஸ்ரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கெனா, சாளினி, நிறோஜி, றொய்சா, ஜீவிக்கா, மைக்கல், ஜெரோன் (சுவிஸ்), டிஜோனி (சுவிஸ்), றஜிந்தன், தாம்சன், நிதர்சன், லக்ஷனா, நிலக்ஷன், றெகான், றோய், றொசான், பிரகாஸ் (பிரான்ஸ்), ஆகாஷ் (பிரான்ஸ்), சிறிஸ்னா (பிரான்ஸ்) ஆகியோரது அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.02.2004) பி.ப. 3.00 மணியளவில் அல்லாரை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம். (சி-33211)(31-11-12)

தகவல்: வ.லூர்துநாயகம் (மகன்).

இந்திய பரம்பரை ஜோதிடர்
அருள்வாக்கு
அம்பிகா அம்மா


மீண்டும் யாழ்.
புண்ணிய பூமிக்கு வருகை.
கைரேகை, ஜாதகம்
பார்க்கப்படும்.
உங்களின் எதிர்காலப் பலன்களை அறிந்துகொள்ளவும்
உங்கள் வாழ்வில் வெற்றியும் சுபீட்சமும் அடையவும்
அருள்வாக்கு அம்பிகா அம்மாவை நேரில் சந்திக்கவும்.
எல்லா நாள்களிலும் (ஒவ்வொரு நாளும்) சாஸ்திரம் சொல்லப்படும்.
அம்மாவைச் சந்திக்கும் இடம் :
அருள்வாக்கு அம்பிகா அம்மா
121, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரீ முருகன் ஜுவல்லர்ஸ் / நியூ லிங்கம் கூல்பார் அருகில்).
(28143)(39-17-12)

BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ். நகர்.
A/L2005 PHYSICS
வெப்பப் பௌதிகம்
BY:-ஜெயசீலன் [B.Sc.]
ஆரம்பம்: 11.02.2004 புதன் 4.00p.m.
(28281)(17)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
பார்த்தீபன நடித்த
தங்கர்பச்சனின்
★ தென்றல் ★
(பிரதிகள் உடன் பெறலாம)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்
(28318)(37)

MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 12.02.2004 இற்கு முன் நேரில்
MCS

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.